Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன: 389

தபால் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 25 ஆம் நாள் துல்ஹஜ் 22 (7-6-61) புதன்கிழமை இதழ் 97

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

# கல்வி வரி கிடையாது

## பார்லிமெண்டரி கூட்டத்தில் மந்திரி பதியுதீன் மஹ்மூத் அறிவிப்பு

### தேர்தலில் தோற்றவர்களுக்கு செனட்டில் ஸ்தானம் இல்லை

கொழும்பு, புதன்

"கல்வி வரி விதிக்கும் யோசனை கைவிடப்பட்டிருக்கிறது" என கல்விமந்திரி திரு. பதியுதீன் மஹ்மூத் நேற்று நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கல்வி வரி சம்பந்தமாக தாம் மந்திரிசபையிடம் எவ்வித யோசனையும் சமர்ப்பிக்கவில்லை என்று, கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மஹ்மூத் கூறினர். திரு. மைத்ரிபாலசேனநாயகா தலைமையில் இன்று நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் பேசும் போது தான் கல்விமந்திரி இவ்வாறு கூறினர்.

"சில யோசனைகள் தெரிவிக்கப்பட்டபோதிலும், அதை நான் அங்கீகரிக்கவில்லை. எனவே இந்த விஷயம் கைவிடப்பட்டதாகக் கருதலாம்" என்றும் ஜனுப் பதியுதீன் மஹ்மூத் கூறினர்.

மார்ச், ஜூலைமாதத் தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்டவர்கள் செனட்சபைக்கு நியமிக்கப்படவோ, தெரிவுசெய்யப்படவோ கூடாதென்றும் பாராளுமன்றக்கட்சி ஏகமனதாகத் தீர்மானித்தது. இக்கூட்டத்திற்குபிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவும் சமூகமளித்திருந்தார்.

## கல்வி மந்திரிக்கு பாடசாலை தொழிலாளர் யூனியன் மகஜர்

### அரசாங்கம் அளிக்கும் உதவியில் அதிருப்தி

யாழ்ப்பாணம், புதன்

கல்வி மந்திரிக்கு வட இலங்கை பாடசாலைத் தொழிலாளர் சங்கம் சமர்ப்பித்துள்ள ஓர் மகஜரில், கல்வி அதிபரின் நேரடி, நிர்வாகத்தின்கீழ் வந்துள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் சில்லறை ஊழியர்களான குமாஸ்தாக்கள், பணியாட்கள், ஆய்வுகூட ஊழியர்கள், நூல் நிலையத் தலைவர்கள் தொழிலாளர்கள், காவற்காரர்கள் போன்றவர்களுக்கு விரிவான முறையில் சம்பளத் திட்டமொன்றை வழங்கும்படி கேட்டுள்ளது.

மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"உதவி பெறும் பாடசாலைகளில் கடமையாற்றும் சில்லறை ஊழியர்களின் வாழ்க்கைக்கு போதுமான சம்பளம் வழங்கும்படி சென்ற 1948-ம் ஆண்டிலிருந்தே கேட்கப்பட்டு வந்தது.

கல்விமந்திரிகளும் உதவி செய்வதாக வாக்களித்து வந்தார்களேயன்றி உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. இதனல் உதவிபெறும் பாடசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

உதவிபெறும் பாடசாலைகள் நேரடி நிர்வாகத்தின் கீழ் வந்த பின்னர், தற்சமயம் சில்லறை

(5-ம் பக்கம் பார்க்க)

பண்டாரநாயக்கா கொலைவழக்கு

## அப்பீல் விசாரணை ஜூலை மாதம்

கொழும்பு, செவ்வாய்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட மூன்றுபேருடைய அப்பீல்களும் ஜூலை மாதத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

எச். பி. ஜெயவர்தனவுக்கு திரு. சி. எஸ். பார் குமாரகுலசிங்க ஆஜராவார் எனத் தெரிகிறது.

## உதவி பெறும் பாடசாலைகள்

கொழும்பு, செவ்வாய்

உதவி பெறும் பாடசாலைகளின் சொத்துக்களை அரசாங்க உடமையாக்கிக்கொள்ள செப்டம்பர் மாதத்தை நிச்சயிப்பதென்று கல்வி ஒலிபரப்பு மந்திரி திரு பதியுதீன் மஹமூத் தீர்மானித்துள்ளார்.

இதற்கான முதல் நடவடிக்கையாக, எல்லா உதவிப் பாடசாலைகளினதும் உரிமையுள்ள சொத்துக்களின் முழு விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு எல்லா பாடசாலைகளின் தலைமையாசிரியர்களையும் அதிபர்களையும் கேட்டுள்ளார்.

## பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபம்

### புல்லர்ஸ் வீதியில் அமைக்கப்படும்

கொழும்பு, ஜூன் 6

காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் ஞாபகார்த்தமாக கொழும்பு புல்லர்ஸ் ரஸ்தாவில் 6 ஏக்கர் காணியில் சர்வதேசமண்டபம் ஒன்றும், நினைவு அரங்கு ஒன்றும் நிறுவப்படும். இதற்கான பூர்வாங்க ஒழுங்குகள் செய்யப்பட்டு விட்டதாய் பண்டாரநாயக்கா ஞாபகார்த்தநினைவுக் குழு தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக 3 சோவியத் நிபுணர்கள் உதவியளிப்பார்கள்.

## மோட்டார் சட்ட திருத்த மசோதா

கொழும்பு, புதன்

மோட்டார் சட்டதிருத்த மசோதா ஒன்று நேற்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி தனிப்பட்ட அல்லது வாடகை மோட்டார்களில் சாரதி உட்பட 8பேருக்குமேல் பிரயாணம் செய்யக்கூடாது.

## கெய்ரோ மகாநாடு

கெய்ரோ, ஜூன் 6

மண்டல சார்பற்ற நாடுகளின் அதிபர்களைக்கொண்ட ஒரு மகாநாட்டை நடத்துவதற்கான 22 நாடுகளின் ஆயத்தக் கூட்டம் கெய்ரோவில்கூடியது. இலங்கையும் இம்மகாநாட்டில் கலந்து கொள்கிறது.

மகாநாட்டை நடத்துவதற்கான இடம், தேதி ஆகியவற்றை இக்கூட்டம் முடிவு செய்யும். செப்டம்பருக்குமுன் அதிபர்கள் மகாநாடு நடைபெறலாமெனத் தெரிகிறது. இந்த மகாநாடு வெள்ளிக்கிழமைவரை நடக்கும்.

## அல்ஜீரியாவில் வெடிகுண்டு சம்பவம்

அல்ஜீரியர்ஸ், ஜூன் 6

அல்ஜீரியாவில் நடைபெற்ற வெடிகுண்டுச் சம்பவங்களின் காரணமாய் இருவர் மாண்டனர். 15 குண்டுகள் வீசப்பட்டதாயும், அல்ஜீரியாவில் மட்டும் 5 குண்டுகள் வீசப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

திருவனந்தபுரம், ஜூன் 5

கேரள ராஜ்யத்தின் உணவு உற்பத்தி, கடந்த 10 ஆண்டுகளில் 50 சதவிகிதத்துக்கு மேல் அதிகரித்திருப்பதாயும், இதே வேகத்தில் உணவு உற்பத்தி பெருகினல் சில ஆண்டுகளில் கேரளம் தன்னிறைவு பெற்றுவிடும் என்றும் உணவு மந்திரி திரு புன்னூஸ் கூறினர்.

மரணதண்டனை பெற்றமூன்று

## கைதிகளின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கவும்

### சிறைச்சாலை கமிஷனருக்குபிரதமர் உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டு, சிறையிலுள்ள புத்தரகித்த, ஜயவர்த்தன, சோமராம ஆகிய மூன்று கைதிகளின் பாதுகாப்புக்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும்படி சிறைச்சாலைக் கமிஷனருக்கு பிரதமர் சிறிமா உத்தரவிட்டுள்ளார்.

மூன்று கைதிகளிலும் எந்தக் கைதியும் எவ்விதமான புகாரும் தெரிவிப்பதற்கு இடம் வைக்கக் கூடாது, என்று பிரதமர் குறிப்பாகத் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு வழங்கப்படும் உணவு சம்பந்தமாகவோ அவர்கள் நடத்தப்படுவது சம்பந்தமாகவோ புகாருக்கு இடம் வைக்கக்கூடாதென்று சிறைச்

(5-ம் பக்கம் பார்க்க)

## இளைஞர்களுக்கான தேசிய சேவை

### பாடசாலைகளை விட்டு விலகு முன் பயிற்சியளிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

கடந்த ஜூலைமாதம் சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டபடி, இளைஞர்களுக்கான தேசியசேவையைச் சீக்கிரம் நிறுவ அரசாங்கம் உத்தேசித்துள்ளது. நாட்டுக்குப் பயன்தரும் வகையில் இளைஞர்களை உபயோகிக்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் இப்போது பரிசீலனை செய்துவருகிறது. விடுமுறைக்காலத்தில் 15 வயதுக்கும் 18 வயதுக்குமிடையே உள்ள இளைஞர்களைப் பயன்படுத்திக்கொள்ள இத்திட்டம் வழிசெய்கிறது.

பாடசாலைகளை விட்டு அவர்கள் விலகுமுன், இத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் பயிற்சியளிக்கப்பெறுவர். சர்வகலாசாலை மாணவர்களும் தாங்கள் விலகுமுன் இப்பயிற்சிக்கு உட்படவேண்டும். கிராமப் பகுதிகளில் இதற்காக நிறுவப்படும் முகாம்களில், பயிற்சிக்காலத்தில் மாணவர்கள் தங்கிபயிற்சி பெறுவார்கள். இந்த இயக்கத்துக்கு விவசாய சேவைக்கமிஷனர் திரு. ஏ. எம். எஸ் பெரேரா பொறுப்பில் இருப்பார் எனத் தெரிகிறது.

## ஆரம்பகனிஷ்ட பாடசாலைகளுக்கு விரிவான பாடத்திட்டம் தயாரிக்க

### ஆசிரியர் சங்கத்துக்கு கல்வி கமிஷன் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

ஆரம்ப, கனிஷ்ட பாடசாலைகளுக்கான விரிவான பாடத்திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு கல்விக் கமிஷன் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தைக் கேட்டிருக்கிறது.

இத்திட்டம் அந்தந்தப் பகுதியில் பிரதானமாகக் கைத்தொழில் விவசாய நிலைமைக்கு முக்கியத்துவம் அளிக்கும் அடிப்படையைக் கொண்டு, தயாரிககப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி குறித்த பாடத்திட்டம் மாகாணங்கள், மாவட்டங்கள் ஆகியவற்றுக்கிடையே ஒன்றுக்கொன்று வேறுபட்டதாய் இருக்கும். பாடசாலைகளைக் குறிப்பிட்ட பகுதியிலுள்ள பொருளாதாரத்துடன் இணைக்கும் வகையில் பாடத்திட்டத்தை அமைக்க வேண்டுமென்பதே கமிஷனின் கருத்து.

## சர்வகலாசாலையில் 2வது விஞ்ஞான ஆய்வுகூடம்

கொழும்பு, செவ்வாய்

பேராதனை சர்வகலாசாலையில் 2 வது விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை நிறுவ 30 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

புதுடில்லி, ஜூன் 6

சீக்கியர்கள் நாட்டின் எதிரிகள் என தாம் சாந்த் படேசிங்குடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது கூறியதாய் மாஸ்டர் தாராசிங் குற்றஞ்சாட்டியதை "முழுப்பொய்" என நேருஜி மறுத்திருக்கிறர்.

## தேவை

விவசாயப் பண்ணைகளிற் பணியாற்றுவதற்கு இளைஞர்கள் தேவை. தெரிந்தெடுக்கப்படுவோருக்கு ஆறு மாத கால இலவசப்பயிற்சியின் பின்னர் ஐந்து ஏக்கர் நிலம் செய்கைக்குக்கொடுக்கப்படும். விஞ்ஞான முறை விவசாயத்தில் ஆர்வமுள்ள இளைஞர்கள் 12-6-61க்குமுன்னர், காரியதரிசி, நாவற்குழிக் கூட்டுப்பண்ணை, 50, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கேள்வி விளம்பரம்

### அல்லைப்பிட்டி
### முதலாம் இலக்க ஒழுங்கை

1961ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் திகதி காலை 10 மணி வரை மேற்படி வேலைக்கு சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 20-6-61ம் திகதி நண்பகல் 12 மணி வரை ரூபாய் 25/- கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்களை எனது கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
அல்லைப்பிட்டிக் கிராமச் சங்கம்,
மண்டைதீவு.

## விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலிருக்கிற ஒஸ்ற்றின் 8 (Austin 8) E. Y. 4200 நம்பர். விபரங்கட்கு: 19, மணல்தறை, திருநெல்வேலி. 1 மணிக்கு மேல் பார்வையிடலாம்.

## சன்மானம்

'விஸ்கி எனும் பெயருடைய 3 வயதுள்ள அல்சேஷன் (பெண்) நாய் (தவிட்டு நிறம்) சென்ற 3-ம் திகதி காணமற் போய்விட்டது. கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப்படும். யாழ்ப்பாணம் கரையூர் பொலிஸ் நிலையத்துக்கு விபரம் தெரிவிக்கவும். அல்லது 391க்கு போன் செய்யவும்.

## பண்டத்தரிப்பு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கூடம் பெற்றோர் ஆசிரிய சங்கம்

இச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம், இப்பள்ளிக்கூட மண்டபத்தில் 10-6-61 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். பள்ளிக்கூட நலன் நோக்கு சபை உறுப்பினர் தெரிவு அத்தருணம் நடைபெறவிருப்பதால் தயவு கூர்ந்து சமுகமளிக்கும்படி பெற்றோர் அனைவரையும் வேண்டுகிறோம்.

(ஒப்பம்) இ. கி. மதியாபரணம்
அதிபர்

## பண்டத்தரிப்பு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கூடம் பழைய மாணவர் சங்கம்

பண்டத்தரிப்பு உயர் நிலைப் பள்ளிக்கூடப் பழைய மாணவர் சங்கம் 10-6-61ல் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறும். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ச. இராசையா
செயலாளர்

# ஆசிரியர்கள் விஷயத்தில் அரசியல்தலையீடு

## விரைவில் நீங்கிவிடும் என்கிறார் கல்வி மந்திரி

கண்டி, திங்கள்

"தேசியக் கல்வித் திட்டத்தின்கீழ் புதிய சட்ட விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இது ஆசிரியர்களை அரசியல் தலையீடுகளிலிருந்தும் இதர இடையூறுகளிலிருந்தும் விடுவிக்கும்" என்று கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மாமூத் கண்டி புஷ்பானந்தா மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் கூறினார்.

அரசியல் தலையீடுகளும் இதர இடையூறுகளும் நீங்கி விட்டால் ஆசிரியர்கள் சுதந்திர மனிதர்களாக கல்வியின் வளர்ச்சிக்கு அதிக சேவை புரியலாமென்று கல்விமந்திரி கூறினார்.

"தேசிய கல்வித் திட்டத்தின்கீழ் சிங்கள ஆசிரியர் விசேஷ ஸ்தானத்தைப் பெறுவர் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்" என்று கல்வி மந்திரி பதியுதீன் மாமூத் கூறினார்.

"இந்த அரசாங்கத்தை அமைக்கவும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைக் கையேற்று தேசிய கல்வித்திட்டத்தை உருவாக்கவும் சிங்கள ஆசிரியர்கள் அளித்த மனப்பூர்வமான ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் நன்றிக் கடன் செலுத்துமுகமாக சிங்கள ஆசிரியர்களின் வாழ்வை உயர்த்துவதற்கு அரசாங்கம் தன்னாலானவற்றையெல்லாம் செய்யும்' என்று மந்திரி பதியுதீன் மாமூத் அறிவித்தார்.

உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின பேசுகையில் முன்னர் ஆசிரியர் இடமாற்ற விஷயங்களில் தலையிட்டது உண்மையென்றும், ஆனால் தவறுகளைத் திருத்தவே தான் தலையிட்டதாகவும் கூறினார்.

சிங்கள ஆசிரியர்களுக்கு ஆங்கில ஆசிரியர்களின் அந்தஸ்து அளிப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமென்று எண்ணிவிடக்கூடாதென்றும் இது பிரச்சினையை அதிகரித்துவிடக்கூடுமென்றும் மந்திரி இலங்கரத்தின கூறினார்.

தபால், மராமத்து மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. டி. பி. தென்னக்கூன் பேசுகையில் வித்தியாதிபதி பதவி வகிப்பதற்கு சிங்கள ஆசிரியர் இப்பொழுது தகுதியுடையவராக இருக்கிறார்களென்று கூறினார்.

கலகெதர எம். பி. ஜனாப் கே. அப்துல் ஜபாரும் மற்றும் பலரும் பேசினர்.

## கலால் கொள்கை

### அமைச்சர் ஆராய்வார்

கொழும்பு, செவ்வாய்

சட்டவிரோத மதுபானத் தயாரிப்பு ஒழிப்பு உட்பட அரசாங்கத்தின் கலால் கொள்கை சம்பந்தமான பல்வேறு விஷயங்களை உள்நாட்டு, கலாசார, கைத்தொழில் அமைச்சு அதிகாரிகளுடன் மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா அடுத்த வாரம் ஆலோசனை செய்வார்.

அமைச்சின் உயர்தர அதிகாரிகளைச் சந்திப்பதற்கு முன்னர் பௌத்த காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுடைய கருத்தையும் அறிந்து கொள்வாரென்று அமைச்சின் அதிகாரியொருவர் கூறினார்.

சாராயத்தின் விலையைக் குறைப்பதுபற்றியும் அமைச்சர் ஆராய்வாரென்று தெரிகிறது.

## "பிள்ளைகளுக்கு சமசந்தர்ப்பம் உண்டு"

### மந்திரி சேனநாயக்கா விளக்கம்

அநுராதபுரம், செவ்வாய்

"இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் இப்பொழுது சமசந்தர்ப்பம் உண்டு" என்று உள்நாட்டு கலாசார கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபாலசேனநாயக்கா அனுராதபுரம் மத்தியபாடசாலை விளையாட்டுப் போட்டியின் முடிவில் கூறினார்.

தேசிய கல்வித்திட்டத்தின் கீழ் மதக்கல்விக்கு விசேஷ இடம் உண்டு என்று திரு. சேனநாயக்கா கூறினார்.

கிராமப் புறங்களில் விளையாட்டு மைதானம் அமைப்பது பற்றியும் உடற்பயிற்சி வசதிகள் அளிப்பது பற்றியும் அரசாங்கம் பரிசீலனைசெய்து வருகிறதென்று மந்திரி சேனநாயக்கா கூறினார்.

## வைத்தீஸ்வர வித்தியாலயம்

### ஐக்கிய நாணய சங்கம்
### 4 வருடங்களில் ரொக்கப்பணம் ரூ. 32,000

யாழ்ப்பாணம், செவ்வாய்

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய ஐக்கிய நாணய சங்கத்தின் நான்காவது வருடாந்தக்கூட்டம் சென்ற திங்கட்கிழமை மாலை கல்லூரி மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. து. சீனிவாசகம் தலைமையில் நடைபெற்றது.

"அங்கத்தவர்கள் ஒவ்வொரு மாதமும் சிறுசிறு தொகையாகக் கட்டி நான்கு வருடங்களில் ரூ.32,000 சங்கத்தின் ரொக்கப் பணமாகச் சேர்ந்திருக்கிறது. கூட்டுறவு முயற்சியினால் நாம் எவ்வளவு தூரம் முன்னேறலாம் என்பதை இது நன்கு விளக்குகிறது" என்று காரியதரிசி திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் தமது அறிக்கையிற் குறிப்பிட்டார்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. து. சீனிவாசகம், உபதலைவர்: திரு. சி. செல்லையா, காரியதரிசி: திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன், உதவிக் காரியதரிசி: செல்வி த. கந்தையா, தனாதிகாரி: திரு. கே. இராமநாதன், நிர்வாக சபை அங்கத்தினர்: திருவாளர்கள் கா. வைரமுத்து, வி. எஸ். நடராசா, ப. இலங்கநாயகம், க. சபாநடேசர்.

## சோற்றுக்குள் நஞ்சு கலந்தாராம்

சாவகச்சேரி, ஜூன் 4

மீசாலை தெற்கு வாசியாகிய சின்னத்தம்பி இளையதம்பி என்பவருடைய சோற்றுப் பாசலுக்குள் நஞ்சு கலந்ததாக அல்லாரையைச் சேர்ந்த கந்தையா வைத்திலிங்கம் என்பவர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதவான் திரு. டி. டபிள்யூ. கே. லடுவாஹெட்டி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதவான், எதிரியை எழுநூற்றைம்பது ரூபாய் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## விளையாட்டுப்போட்டி

### ரேயல்கழகம் வெற்றி

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசன்துறை ரேயல் விளையாட்டுக் கழகமும், இராணுவ வீரர்களும் கலந்துகொண்ட சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டியில் ஒரு விக்கட் 61 ஓட்டங்களால் ரேயல்கழகம் வெற்றிபெற்றது.

ரேயல் விளையாட்டுக்கழகமும், இராணுவ வீரர்களும் கலந்துகொண்ட செற்அப் முறையிலான கைப்பந்தாட்டப் போட்டியில் இராணுவ வீரர்கள் வெற்றிபெற்றனர்.

கட்டுவன் பாலர் ஞானோதய சபையும், இராணுவ வீரர்களும் கலந்துகொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இராணுவத்தினர் ஒருகோல் அடித்து வெற்றியீட்டினர்.

## ரஷ்யாவிடமிருந்து அதிக ஆயுதங்கள்

### இந்தோனேஷியா வாங்குகிறது

பம்பாய், ஜூன் 6

சோவியத் ரஷ்யாவிடமிருந்து மேலும் ஆயுதங்கள் பெறுவதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி நேற்று பம்பாய் வழியாக மாஸ்கோவுக்குச் சென்றார்.

மேற்கு ஈரியான் பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளள விரும்புவதாகவும் அவசியமேற்பட்டால் ஆயுதம் உபயோகித்து தீர்வு காண்பது பற்றிய வாய்ப்பையும் நாம் கைவிட்டுவிடவில்லை என்று இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி தெரிவித்தார்.

# ஆழ்வாப்பிள்ளை ஓய்வுபெறுவார்

கொழும்பு, செவ்வாய்

மூன்று நிரந்தரக் காரியதரிசிகள் உடனடியாகப் பதவிலிருந்து ஓய்வுபெறவிருக்கின்றனர். உணவு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, காணி அபிவிருத்தி நீர்ப்பாசன மின்சார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஸி. பி. பி. பெரேரா, தொழில் தேசியமய சேவைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஸி. பி. குமாரசிங்கா ஆகியோரே உடனடியாக ஓய்வு பெறவிருக்கும் நிரந்தரக் காரியதரிசிகளாவர்.

திரு. ஆழ்வாப் பிள்ளையும் திரு. ஸி. பி. பி. பெரேராவும் சிவில்சேவை சிரேஷ்ட அங்கத்தவராவர்.

நிர்வாக குமாஸ்தா சேவைகளிலுள்ளவர்கள் 55 வயதை அடைந்ததும் மூன்று மாத முன்னறிவித்தலில் ஓய்வுபெற அனுமதிப்பதென்று அரசாங்கம் சமீபத்தில் செய்த முடிவையொட்டியே இம் மூவரும் ஓய்வுபெறவிருக்கிறார்கள்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

**புதன் 7-6-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-15 உறுதுப்பாடல்கள்.

பகல் 12-00 சித்திரகானம்; 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை.

இரவு 7-00 நேயர்விருப்பம், 8-00 வி. சுந்தரம் - பாட்டு, 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 கானமஞ்சரி.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 திருப்பனந்தாள் ஆர். ஷண்முகசுந்தரம் - வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 2-10 இசைக்கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நடக சங்கீதம்), 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 'தனிமை' - நாடகம் 8-00 திருப்பனந்தாள் ஆர். ஷண்முகசுந்தரம் - வீணை, 8-30 திரைப்படஇசை, 9-45 நல்லுரை, 9-20 ரேடியோ நாடக இசை.

## நீரில் மூழ்கி மரணம்

மாவிட்டபுரம், செவ்வாய்

கீரிமலையில் நீராடச் சென்ற காங்கேசன் துறையைச்சேர்ந்த கதிரிப்பிள்ளை இராசரத்தினம் என்பவர் கீரிமலைக் கடலில் மிதக்கக்காணப்பட்டார்.

சடலத்தைக் கண்ட அப்புத்துரை தங்கவேலு என்பவர் கட்டுமரம் எடுத்துச் சென்று சடலத்தைக்கொண்டு வந்தார்.

மல்லாகம் நீதிவான் திரு. டி. தாமோதரம்பிள்ளை மரண விசாரணை நடத்தினார். நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என விசாரணையின் பின் அறிவிக்கப்பட்டது.

## எரி காயங்களால் பெண் மரணம்

காத்தான்குடி, திங்கள்

கல்லடி என்னுமிடத்தைச் சேர்ந்த திருமதிவிஜயகமூர்த்தி என்பவர் நித்திரையிலிருந்த பொழுது மண்ணெண்ணை விளக்குத் தட்டுப்பட்டுத் தீப்பற்றிக் கொண்டதால் எரிகாயங்கள் காரணமாக ஆஸ்பத்திரியில் மரணமானர்.



# அங்கோலாபற்றி ஐ. நா. கவலைப்படத் தேவையில்லையாம்!

## போர்ச்சுகல் கூறுகிறது

நியூயார்க், ஜூன் 6

"அங்கோலாவைப் பற்றிக் கவலைப்படவேண்டியது போர்ச்சுக்கல்தான்; ஐ. நா. சபையல்ல" என்று ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு போர்ச்சுக்கல் பிரதிநிதி எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அங்கோலா நிலைமை பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

அங்கோலாவில் ஆயிரக் கணக்கான மக்கள் கொலை செய்யப்படுவதாகவும் அங்கு மனித உரிமையும் அடிப்படை உரிமையும் சிதைக்கப்படுவதாகவும் தெரிவித்து அங்கோலா நிலைமைபற்றி விவாதிக்கப் பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்டவேண்டுமென்று ஆசிய ஆபிரிக்க நாடுகளும் யூகோஸ்லேவியாவும் பாதுகாப்புச் சபைத் தலைவரைக் கோரியிருந்தன.

### இந்தியா, கானு கோரிக்கை

பாதுகாப்புச் சபையின் அங்கத்துவ நாடுகளல்லாத இந்தியாவும், கானுவும் அங்கோலா பற்றிய விவாதத்தில் தங்களையும் அனுமதிக்க வேண்டுமென்று பாதுகாப்புச் சபைத் தலைவரைக் கேட்டுள்ளன.

### மூன்று நாடுகளின் புதிய பிரேரணை

பாதுகாப்புச் சபையின் இன்றைய கூட்டத்தில், இலங்கை, ஐக்கிய அரபுக் குடியரசு, லைபீரியா ஆகிய மூன்று நாடுகளும் புதியதொரு பிரேரணையைக் கொண்டுவருவார்களெனஎதிர்பார்க்கப்படுகிறது.

அங்கோலாவில் அடக்கு முறையை உடனடியாக நிறுத்தும்படியும் அங்கோலாவின் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக ஐ. நா. பொதுச் சபையின் தீர்மானத்தையொட்டி நியமிக்கப்பட்ட ஐந்து நாடுகளைக்கொண்ட ஐ. நா. உபகமிட்டி அங்கத்தினர்களை அங்கோலாவுக்குச்செல்ல அனுமதியளிக்கும்படியும் அந்த உபகமிட்டிக்கு ஒத்துழைப்பளிக்கும்படியும் போர்ச்சுக்கலைக் கேட்டுக் கொள்ளுவதுதான் இந்த மூன்று நாடுகளும் கொண்டுவர உத்தேசித்திருக்கும் தீர்மானம் என அறியப்படுகிறது.

பாதுகாப்புச்சபை கூடவிருக்கும் இச்சமயத்தில் போர்ச்சுக்கல் ஆட்சேபக் கடிதமொன்றை பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ளது.

அங்கோலாபற்றி ஐ. நா. ஸ்தாபனம் கவலைப்படவேண்டியதில்லையென்று குறிப்பிடப்பட்டிருக்கும் அக்கடிதத்தில் "அங்கோலா சங்பந்தமாக போர்ச்சுக்கல்மீது உண்மைக்குப் புறம்பானதும் ஆதாரமற்றதுமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன" என்றும் கூறப்பட்டுள்ளது.

## வைரத்திலும் வைரமானவை

லண்டன், ஜூன் 6

பிரிட்டன் தேசிய பௌதிக ஆய்வுக்கூடங்கள் வெற்றிகரமாக செயற்கை வைரங்களை உற்பத்தி செய்வதுடன் மட்டுமின்றி வைரத்திலும் கடினமான பொருள்களையும் செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன் ரெடிங்டன் ஆய்வுக்கூடம் முதல் வைரங்களைச் செய்தது. சமீபத்தில் இதுவரை இயற்கையிலே கண்டறியாத "கோஇஸைட்" எனும் பொருளையும் ஒரு புதிய இயந்திரம் உற்பத்தி செய்துள்ளது.

## மாஸ்கோவில் அனந்தசயனம் அய்யங்கார்

மாஸ்கோ, ஜூன் 6

இந்திய பார்லிமெண்ட் சபாநாயகர் திரு. அனந்தசயனம் அய்யங்காரின் தலைமையில் சோவியத் ரஷ்யாவில் சுற்றுப் பிரயாணம் செய்யும் இந்திய பார்லிமெண்டரித் தூது கோஷ்டி நேற்று உக்ரேன் வந்து சேர்ந்தது.

உக்ரேன் பார்லிமெண்ட் சபாநாயகர் இந்திய தூது கோஷ்டியை வரவேற்ருர். விமானநிலையத்தில் திரு. அனந்தசயனம் அய்யங்கார் பேசுகையில் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு சோவியத்யூனியன் உதவியளிப்பதற்குப் பாராட்டுத் தெரிவித்ததுடன் இந்த ஒத்துழைப்பு மேலும் வளருமென நம்பிக்கை தெரிவித்தார்.

# அஸ்ஸாம்மொழிப்பிரச்சினை: சாஸ்திரியின் நம்பிக்கை

ஷில்லாங், ஜூன் 6

அஸ்ஸாம் ராஜ்யத்திலிருந்து தாம் புறப்படுவதற்குமுன்னர் அஸ்ஸாம் ராஜ்ய மொழிப்பிரச்சினைக்கு ஒருவகை முடிவு ஏற்பட்டுவிடுமென்று இந்திய உள்நாட்டு மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.

அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக வங்காள மொழியையும் அங்கீகரிக்கவேண்டுமென்று கோரி கச்சார் ஜில்லாவில் கிளர்ச்சி நடந்ததும் அதைத்தொடர்ந்து சில்சார் பகுதியில் கலகம் ஏற்பட்டதும் இக்கலகத்தில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தில் பதினொரு பேர் உயிரிழந்ததும் நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

கலகம் நடைபெற்ற சில்சாருக்கும் சென்று கச்சார் ஜில்லாத் தலைவர்களை லால்பகதூர் சாஸ்திரி சந்தித்துப் பேசினர்.

திரு. சாஸ்திரி இன்று புதுடில்லிக்குப் புறப்படவிருக்கிருர். திரு. சாஸ்திரி புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்லுமுன் அஸ்ஸாம்ராஜ்ய மொழிப் பிரச்சினைக்கு ஒருவகையான முடிவு ஏற்பட்டுவிடுமென தாமும் நம்புவதாக அஸ்ஸாம் முதன்மந்திரி திரு. சாலிகா நேற்றுத் தெரிவித்தார்.

## நேரு-கோஷ் சந்திப்பு

புதுடில்லி, ஜூன் 5

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக்காரியதரிசி திரு. அஜாய் கோஷ், பிரதமர்நேருவைச் சந்தித்துப் பேசினர், அஸ்ஸாம் விஷயமாகச் சம்பாஷணை நடைபெற்றதாயும், அது பலனுள்ளதாய் இருந்ததாயும், கோஷ் கூறினர்.

## "கண்ணில்பட்டால் சுட்டுக் கொல்!"

### கினியாத் துருப்புகளுக்கு உத்தரவு

லண்டன், ஜூன் 6

கினியாவில் மெரு பகுதியிலுள்ள காடுகளில் கண்ணில்படும் எவரையும் சுட்டுக் கொல்லும்படி கினியா அரசாங்கம் தனது துருப்புக்களுக்கும், பொலிசாருக்கும் உத்தரவிட்டுள்ளது.

கினியா அரசாங்கத்துக்கெதிராக மெருவனப் பகுதியில் 'மௌமௌ' இயக்கம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த இயக்கத்தில் ஆயிரத்துக்கதிகமானேர் இரத்தத்தில் கையொப்பமிட்டு விசுவாசப் பிரமாணம் செய்திருப்பதாகவும் சமீபத்தில் அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்ததன் பேரில் அந்த இயக்கத்தினரை 'வேட்டையாடி'ப் பிடிப்பதற்கு பொலிசாரையும் துருப்புக்களையும் அரசாங்கம் அனுப்பியது. இயக்கத்தினரைக் கண்டுபிடிக்க முடியாது போனதால் அப் பகுதியில் கண்ணில்படும் எவரையும் சுட்டுக்கொல்லும்படி இப்பொழுது உத்தரவிடப்பட்டுள்ளது.

# குடியேற்றவாசிகளுக்கு போதிய வசதிகள் இல்லை

## யானைகளால் பயிர் சேதம்

கிளிநொச்சி செவ்வாய்

"இங்குள்ள அபிவிருத்தி வேலை திருப்திகரமாக அமையாததால் குடியேற்ற வாசிகளுக்கு அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காணித்துண்டுகளை வழங்காதிருக்க முடிவுசெய்துள்ளேன்."

இவ்வாறு வட்டக்கச்சியிலுள்ள படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தைச்சேர்ந்த குடியேற்ற வாசிகளிடையே பேசும்போது யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. டி. மூர்த்தி கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: "தடுப்புக் காவலில் இருக்கும் கிளிநொச்சி எம். பி. திரு. ஏ. சிவசுந்தரம் இப்பகுதியில் அபிவிருத்தி வேலை திருப்திகரமாக நடைபெறவில்லையென அறிவித்துள்ளார்.

ஊக்கமில்லாதவர்களுக்கு காணி உதவுவதை நிறுத்திவிடவும் 1959ம் ஆண்டிலிருந்து தண்ணீர் வரி கொடுக்காதவர்களுடைய நிலத்தை திருப்பிப் பெறவும் நான் உத்தேசித்துள்ளேன். இதுசம்பந்தமாக குடியேற்ற வாசிகள் பின்வரும் குறைபாடுகளையும் கஷ்டங்களையும் அரசாங்க உதவி அதிபருக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். கொடுக்கப்பட்ட காணிகள் செம்மையாக அளக்கப்படாததால் குடியேற்ற வாசிகள் அதிக பணநஷ்டமடையவேண்டியிருந்தது.

இரணமடுக் குளத்துக்குத் தண்ணீர் குடிக்கச்செல்லும் யானைகள் குடியேற்ற வாசிகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களின் பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. குடியேற்றவாசிகளையும் யானைகள் கொன்றுள்ளன.

நீர்ப்பாசனத்துக்காகக் கட்டப்பட்ட கால்வாய்கள் முறையாகக் கட்டப்படாததால் சில சமயம் தண்ணீர் கூடியும் சிலசமயம் குறைந்தும் பயிர் நிலங்களுக்குப் பாய்கின்றன. இது நெல் வயல்களைப் பெரிதும் பாதித்துள்ளன. கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டத்தினல் பயிர்கள் சேதமடைகின்றன.

தனிப்பட்டவர்கள் கடை நடாத்த அனுமதிக்கப்படாததையால் இங்குள்ள குடியேற்ற வாசிகள் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பொருள்களை மட்டுமே வாங்க வேண்டியதாக உள்ளது. சந்தையோ பிரசவ விடுதிகளோ இதுபோன்ற அத்தியாவசியமான வசதிகளோ இங்கு இல்லை. கிளிநொச்சிக்குச் செல்லும் ஒரே தெருவை அடையக்கூடிய பாலம் பலதடவை வெள்ளத்தால் சேதமடைந்ததால் குடியேற்றக்காரர்களின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்படலாயிற்று.

கூட்டுறவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் தனிப்பட்ட விவசாயிகள் நெல்லுக்கான உத்தரவாத விலைக்குரிய பணத்தைப் பெறுவதற்கு உதவுவதற்காக அவர்களிடமிருந்து நெல்லை வாங்கியபின் குடியேற்ற வாசிகளிடமிருந்து தாம் நெல்லை வாங்கியதாகக் கூறினர்கள். இதனல் குடியேற்ற நிலத்தில் அதிக நெல் விளைகின்றது என அரசாங்கம் தவருகக் கருதி, 1959ம் ஆண்டிலிருந்து குடியேற்றவாசிகள் வரி செலுத்த வேண்டுமென வற்புறுத்தியது.

அரசாங்கம் குடியேற்ற வாசிகளின் கொட்டில்களுக்கு ஓடு போடுவதற்காக பல வருடங்களுக்குமுன்னர் பணம் ஒதுக்கியிருந்தும குடியேற்றத்திட்டத்துக்குப் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தரின் அக்கறையின்மையால் இந்தவேலை இன்னும் செய்யப்படாமல் இருக்கின்றது.

குடியேற்றப் பகுதியிலுள்ள ஆசிரியர்களுக்கு உரிய விடுதிகள் இல்லாததால் அவர்கள் ஒவ்வொருநாளும் 20 மைல் தூரத்துக்கு சைக்கிளில்செல்ல வேண்டியுள்ளது."

## பயிற்சி பெற்ருேர் பற்ருக்குறை

### டாக்டர் குருகே கவலை

பாணந்துறை, திங்கள்

"நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ள போதிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்ட வேலைகளிலும் சேவை புரிவதற்கு பயிற்சி பெற்றவர்கள் பற்ருக்குறையாக உள்ளது. இது ஒழுங்கான திட்டமில்லாத கல்வியினல் வந்த கேடு" என்று கல்வி அமைச்சின் காரியதரிசி டாக்டர் ஏ. டபிள்யூ. பி. குருகே, ஸ்ரீ சுமங்கல கல்லூரியில் கலை, விஞ்ஞான கண்காட்சித் திறப்புவிழா சம்பந்தமான வைபவத்திற் பேசுகையில் குறிப்பிட்டார்.

"நாங்கள் விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறேம். எங்கள் நாட்டின் வருங்காலப் பிரஜைகள் நாட்டின் நலனுக்காக உழைக்கக் கூடிய கல்வியை நாங்கள் அளிக்க வேண்டும்" என்று டாக்டர் குருகே கூறினர்.

பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்துள்ள நாடு ஒவ்வொன்றும் விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்துள்ளதென்றும் விஞ்ஞானம் கல்விக்குச் சகல வசதியுமளித்துள்ளதென்றும் டாக்டர் குருகே தெரிவித்தார்.

தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு நல்ல வருங்காலம் இருக்கிறதென்று டாக்டர் குருகே கூறினர்.

## பாடசாலைகள் எடுக்கப்பட்டதன் நோக்கம்

### உணவுமந்திரி விளக்கம்

ஹேவஹெட்டா, திங்கள்

"முற்காலத்தில் நாட்டின் சில பகுதிகளில் பாடசாலைகள் இருக்கவில்லை. பாடசாலை வசதியில்லாத பிள்ளைகளின் நலனுக்காக மத, சமூக ஸ்தாபனங்கள் பாடசாலைகளை ஸ்தாபித்தன. இந்த ஸ்தாபனங்கள் அளப்பரிய சேவை புரிந்தன. இவைகளை நாம் ஒப்புக்கொண்டு பாராட்டுகிறேம்" என்று உணவுவர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன உடுவெலி மெதடிஸ்த பாடசாலையில் கலைப்கைப்பணி பொருட்காட்சியில் பேசுகையில் கூறினர்.

கல்வியில் சகல பிள்ளைகளுக்கும் சந்தர்ப்பம் அளிப்பதற்காகவே பாடசாலைகளை எடுக்க வேண்டி நேரிட்டதென்று திரு. இலங்கரத்தின கூறினர். எந்தப் பிரிவினருக்கும் எந்த மதத்தினருக்கும் அநியாயம் செய்வதற்காகப்பாடசாலைக்ளை அரசாங்கம் எடுக்கவில்லை என்று மந்திரி இலங்கரத்தின கூறினர்.

தொழில் நுட்பக் கல்வியின் அவசியத்தையும் மந்திரி வலியுறுத்தினர்.

## பர்மா-சீன எல்லைப் பிரதேசங்கள் மாற்றம்

ரங்கூன், ஜூன் 6

பர்மாவுக்கும் சீனவுக்குமிடையில் ஏற்பட்ட எல்லை ஒப்பந்தத்தின் கீழ் சீன-பர்மா எல்லைப்பிரதேசங்கள் சில பரிமாறப்பட்டுள்ளன. இந்த வைபவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லேடன்" தயாரிப்பு
Leyden L.I.L
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!
அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

இவ்வுலகில் ஒருவனுக்கு எத்தனைக்கெத்தனை பொறுமை மிகுதிப்படுகிறதோ, அத்தனைக்கத்தனை அவனுக்கு உலகவிவகாரங்களில் வெற்றி உண்டாகின்றது. —பாரதியார்.

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 25உ (7-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## நமது சுகாதாரம்

இலங்கையிலே இப்போது நடைபெறும் சுகாதாரவார சம்பந்தமாக அமைச்சர் வெளியிட்டுள்ள ஒரு செய்தியிலே, நாம் சுகாதார விஷயத்தில் மிக முன்னேறியிருப்பதாக பெருமைப்படுகின்றார். காலரா, பிளேக், வைசூரி, மலேரியா இவற்றை நாம் ஒழித்துவிட்டதுடன் நமது மரண விகிதமும் 1000 க்கு ஒன்பதுக்குக் குறைந்துள்ளதாயும், சராசரி ஆயுளும் 31 லிருந்து அறுபத்திரண்டரைக்கு உயர்ந்து விட்டதாகவும் தெரிவிக்கின்றார். இந்தப் புள்ளிவிபரங்கள் ஏட்டளவில் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கலாம். ஆனால் நமது ஆஸ்பத்திரிகளுக்கு ஒரு முறை அந்த அமைச்சரே சென்று பார்த்தால் சுகாதார விஷயத்தில் அவர் மகிழ்ச்சி அடைவதற்கு ஒன்றுமில்லை என்பதை உணரலாம்.

ஒரு சில நோய்களை எதிர்த்துப் போராடி ஒழித்தால் புதுப்புது நோய்கள் கிளம்புகின்றன. ஆஸ்பத்திரிகளை புதிதாகக் கட்டிக்கொண்டே போனாலும், நோயாளருக்கு இடம் காணவில்லை. படுக்கைகள் போதாமல் ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும், பூமியிலே பலர் படுத்திருப்பதைப் பார்க்கலாம். ஆஸ்பத்திரியில் இடம் கிடைக்காமல், வீடுகளிலும் பலர் நோய்வாய்ப்பட்டு அவதிப்படுகின்றனர். இவற்றையெல்லாம் கவனிக்கையில் இன்றைய சுகாதார நிலைமை பற்றி அமைச்சர் உள்ளிட்டு யாரும் பெருமைப்படுவதற்கு எதுவுமில்லை.

சுகாதார டைரக்டர் டாக்டர் கருணைரத்தினவும், உதவி டைரக்டர் பி. ராஜசிங்கமும் சுகாதார சம்பந்தமாக எழுதியுள்ள கட்டுரைகளில், நோய்களில் 40 சதவிகிதம் மக்களே தடுத்துக் கொள்ளக்கூடியதென்கின்றனர். சுகாதாரக்கேடான குடியிருப்பு, உணவு, குடிதண்ணீர், கக்கூஸ் சாக்கடை வசதிகள் இல்லாமை இவையே பல நோய்கள் பரவுவதற்குக் காரணமாக இருப்பதாயும் சரியாக அறிவுறுத்தியுள்ளனர். சுத்தமான குடிதண்ணீர், சாக்கடை கக்கூஸ் வசதிகள் சுகாதாரமான குடியிருப்பு வீடுகள் இவற்றுக்கு ஒழுங்கு செய்யவேண்டியது சிறப்பாக அரசாங்கத்தின் கடமை. தலைமை அரசாங்கமே எல்லாவற்றையும் இழுத்துப்போட்டுக்கொள்ளாமல், மாகாண சுயாட்சி அளித்து ஆங்காங்கே வேண்டிய வசதிகளைச் செய்துகொள்ள வசதியளித்தால், நிலைமை பெரிதும் முன்னேறக்கூடும். இது வேறு விஷயம்.

அரசாங்கக் கடமை ஒருபுறமிருக்க, தங்கள் சுய நன்மையைக் கருதியாயினும், சுத்தமான வாழ்க்கை மக்கள் வாழ முற்படவேண்டும். வறுமையாக இருப்பினும், கஞ்சி குடித்தாலும் சுத்தமாக இருக்கலாம். "கந்தையானாலும் கசக்கிக்கட்டு, கூழானாலும் குளித்துக்குடி" என்ற பொன்மொழிகள் சுத்தத்தின் அவசியத்தை வற்புறுத்துகின்றன, கூடுமானவரை சுத்தமான வாழ்க்கை நடத்துபவர்கள், தங்களுக்கு நோய்வராமல் தடுத்துக்கொள்ளமுடியும்.

இச்சந்தர்ப்பத்தில் இங்குள்ள சாப்பாட்டுக் கடைகளைப் பற்றி நாம் குறிப்பிடவேண்டியவர்களாக இருக்கிறோம். இரண்டொன்றைத்தவிர, பல கடைகளிலும் சுகாதார நிலை மிகவும் மோசம். உணவும் அப்படியே என்று சொல்லப்படுகின்றது. பலரும் ஒட்டல்களில் வந்து சாப்பிடுவதாலும், அங்கு அதிக சுத்தமாக இருக்க மாநகரசபைமுதலியஸ்தலஸ்தாபனங்கள் கண்டிப்பாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். சுகாதார முறையில் நடக்கும் ஹோட்டல்களுக்குப் பரிசு கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும். முடிந்தால் ஸ்தல ஸ்தாபனங்களே தங்கள் பொறுப்பில் சுத்தமான முறையில் ஹோட்டல்களை நடத்துவதும், பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்க உதவும்.

# வாழ்க்கைத்தரம் என்றால் என்ன?

## எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை, நல்லவை செய்தல்

— மீ. லி. சபரிராஜன் —

"தாத்தா!" என்றான் பேரன்.

"என்னடா, ராசா?" என்று கேட்டார் தாத்தா.

"நேற்று நான் ஒருபத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். அதில், நம் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதாக எழுதியிருந்தது. வாழ்க்கைத் தரம் என்றால் என்ன தாத்தா?"

"ஓ, உன் காதுக்குக்கூட அது எட்டிவிட்டதா?" என்று சொல்லிவிட்டு, தாத்தா தம் பொக்கை வாயைத் திறந்து சிரித்தார்.

பையன் விளங்காமல், "என்ன தாத்தா?" என்றான்.

"ஒன்றுமில்லை; உலக முழுவதும் இப்போது அதைப் பற்றித்தான் பேச்சாயிருக்கிறது. பெரிய பெரிய அறிவாளிகள், ராஜதந்திரிகள் முதலியோர் அதைப் பற்றிதான் வாதவிவாதம் செய்து கொண்டிருக்கிறார்கள்."

"அப்படியானால் நான் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். — சொல்லுங்கள், தாத்தா!"

"அது ரொம்பப் பெரிய விஷயம். பொருள் நிறைநதது இந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட புதுமைகளிலெல்லாம் பெரிய புதுமை அது! தெரிந்து கொள்ள வேண்டியதுதான்" என்று சொல்லிவிட்டு, தாத்தா சற்று நேரம் யோசித்தார். பிறகு சொல்லத் தொடங்கினார்: "பத்துப் பதினைந்து வருஷத்துக்கு முன்னாலே, நம் தமிழ் நாட்டில் ஒரு கிராமம் இருந்தது—கிராமம் என்றால் என்னவென்று தெரியுமல்லவா, உனக்கு?"

பையன் சிரித்துவிட்டு, "என்ன தாத்தா, அப்படிக் கேட்கிறீர்கள்? எனக்குத் தெரியாதா?" என்றான்.

"நீ கிராமத்துக்குப் போனதாகத் தெரியவில்லையே; அதுதான் கேட்டேன்" என்றார் தாத்தா.

"போகாவிட்டால் என்ன, தாத்தா?— புத்தகத்திலேதான் படித்திருக்கிறேனே; கிராமம் மாத்திரமா? உலகம் முழுவதையும் பற்றிப் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கிறார்களே—"

"பேஷ், பேஷ்! கெட்டிக்காரன்—உம், என்ன சொன்னேன்? - பத்துப் பதினைந்து வருஷத்துக்கு முன்னால் நம்மருமைச் செந்தமிழ் நாட்டில் ஒரு கிராமம் இருந்தது. அங்குள்ளவர்களுக்கு வேலை பயிர்த் தொழில்.—நீ படித்த புத்தகத்தில், கிராம வாசிகளுக்கு முக்கிய வேலை பயிர்த் தொழில் என்றுதானே எழுதியிருந்தது?"—

"ஆமாம்; ஆமாம்—"

"நல்ல வேலை! — காலையில் எழுந்ததும் அவர்கள் வயிறு நிறையக் கஞ்சியைக் குடித்துவிட்டு, மாட்டை ஓட்டிக்கொண்டு வயலுக்குப் போவார்கள். உழுதோ விதைத்தோ நீர்ப்பாய்ச்சிவிட்டோ மாலையில் வீட்டுக்குத் திரும்புவார்கள். குளித்துவிட்டு, மறுபடியும் ஏதாவது சாப்பிட்டுவிட்டு பிள்ளைகுட்டிகளுடனும் உற்றார் உறவினர்களுடனும் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருப்பார்கள். பிறகு, படுத்துத் தூங்குவார்கள். அவர்களுடைய வீடுகள் பெரும்பாலும் மண் குடிசைகளாய்த்தான் இருக்கும். ஆனால் பார்ப்பதற்கு அழகாகவும் சுத்தமாகவும் இருக்கும். மேலே, கூரை போட்டிருக்கும். அதில் ஏதாவது ஒரு காய்கறிக் கொடி படர்ந்திருக்கும். அவர்கள் திடமாயிருந்தார்கள். நோய் வந்து படுப்பதே அருமை. அப்படி ஏதாவது ஒரு நோய் வந்தாலும், சுக்கு, மிளகுக் கஷாயத்திலேயே குணப்படுத்திக் கொள்ளுவார்கள். வருஷத்துக்கு ஒரு முறையோ இரண்டு முறையோ கோவில் குளம்—தேர்த் திருவிழாவுக்குப் போவார்கள். இட்டிலி, தோசை, வடை, சீடை, முறுக்கு இவைதாம் அவர்களுக்குத் தெரிந்த தின்பண்டங்கள். குடிக்கக் கூழ், உடுத்திக் கொள்ள முழத்துணி— இவையே அவர்களுக்கு முக்கியமாக வேண்டியவை. அவர்களுக்கு ஒரே ஒரு கவலைதான் உண்டு. காலத்தில் மழை பெய்ய வேண்டும்; அவ்வளவுதான். திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தார்கள். கையில் பணம் நிறைய இருந்தாலுங்கூட என்ன செலவு செய்வதென்று தெரியாமல் திண்டாடுவார்கள்.—"

"வேடிக்கையாயிருக்கிறதே, தாத்தா!" என்றான் பையன் வியப்புடன்.

"ஆமாம், வேடிக்கையாய்த்தான் இருக்கும்; இந்த வேடிக்கையின் மீதியையும் கேள்" என்று சொல்லிவிட்டு தாத்தா மறுபடியும் சொல்லத் தொடங்கினார்.

"அவர்கள் நன்றாய் உழைத்தார்கள். ஊருக்கு நாலாபுறமும் ஒரே தோட்டமும் துரவுமாய்ப் பச்சைப் பசேலென்று இருந்தது. அது கண்ணுக்கும் மனசுக்கும் ஆனந்தமாயிருந்தது.—இப்படி அவர்கள் சந்தோஷமாயிருந்தபோது, எங்கிருந்தோ ஒரு பெரிய பணக்காரப் புண்ணியவான் அந்த ஊருக்குப் பக்கத்திலேயிருந்த ஒரு பட்டணத்தில் ஒரு நெசவாலை வைத்தார். அதற்கு நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேண்டியதாயிருந்தார்கள். கிராம வாசிகளில் நிலம்-நீச்சு இல்லாத சிலர், அங்கு வேலைக்குப் போனார்கள். கிராமத்துக்கும் அந்தப் பட்டணத்துக்கும் நான்கு கல் தொலைவுதான். காலையில் போவார்கள்; மாலையில் வந்துவிடுவார்கள். அவர்கள் நாள் தோறும் பட்டணத்துக்குச் சென்றதால் அங்குள்ள மக்களுடன் நெருங்கிப் பழக வேண்டியதாக நேர்ந்தது. அவர்களுடன் பழகப் பழக, அவர்களைப் போலவே ஆனார்கள். வெள்ளைச் சட்டை போட்டுக் கொண்டார்கள். தலைக்குக் கிராப்பு வைத்துக் கொண்டார்கள். ருசியான சாப்பாடு சாப்பிட்டார்கள். காப்பி குடித்தார்கள்—முழுப் பட்டணவாசிகளாகவே ஆகிவிட்டார்கள். அவர்கள் கர்வத்துடன் நடந்தார்கள். ஒரு நாள் ஒரு கிராமவாசி அவர்களுள் ஒருவரைப் பார்த்து, 'என்னப்பா, பேசக்கூடாதா?' என்று கேட்டார். அதற்கு அந்த ஆலைத் தொழிலாளி, 'என்ன பேசச் சொல்லுகிறாய், உன்னுடன்? உனக்கு உழத் தெரியும்; கஞ்சி குடிக்கத்தெரியும். வேறுஎன்ன தெரியும்?' என்றுசொல்லிவிட்டு அலட்சியமாக அப்பால் போனான். இது கிராம வாசிகளுக்கு வேதனையாயிருந்தது. அவர்கள், 'நாம் ஏன் இவ்வளவு கஷ்டப்படவேண்டும்? நாமும் ஆலை வேலைக்குப் போவோமே; சொகுசாகவாழ்வோமே' என்று நினைத்தார்கள். ஒன்றிரண்டு வருஷத்துக்குள் அந்தஊர் முழுவதும் ஆலை வேலைக்குப் போய் விட்டது. தோட்டமும் துரவும் காய்ந்துகருகிப்போச்சு. ஆனால் இப்போது அவர்கள் கையில் காசு நிறையப் புழங்கிற்று. செலவு செய்யவும் கற்றுக் கொண்டார்கள். துணிக் கடைகள் பல புதிதாய் முளைத்தன. ஹோட்டல்கள் வைக்கப்பட்டன. சலவைக் கடைகள் ஏற்பட்டன. வீட்டுக்கு வீடு ரேடியோ முழங்கிற்று. அப்புறம்? — ஊர்ச்சாவடி இடிக்கப்பட்டு, அது இருந்த இடத்தில் பெரிதாக ஒரு மருத்துவ இல்லம் கட்டப்பட்டது. ஒரு தும்மல், இருமல் வந்தாலும் பெருமையுடன் புட்டியைத் தூக்கிக் கொண்டு மருந்து வாங்க அங்கு ஓடினார்கள்-எழுந்தும் எழுந்திராததுமாக, சூடாக, காப்பிசாப்பிடுவார்கள். பிறகு, கொள்ளிக்கட்டையை வாயில் வைத்துக்கொண்டு குளக்கரைப் பக்கம் போவார்கள—"

பேரன் திடுக்கிட்டுப் போனான். "கொள்ளிக் கட்டையா? அது என்ன தாத்தா, அது? — சிகரெட்டா?" என்று கேட்டான்.

"ஆமாம், ஆமாம்; அதுவே தான்; நான் அதைத் தமிழாக்கியிருக்கிறேன். நம்முடைய செந்தமிழ் மொழியைக் களங்கப்படுத்த எனக்கு விருப்பமில்லை. அதனால்தான் அப்படிச் சொன்னேன், — பொருள்சரிதானே?"

"சரிதான்" என்றான்பேரன், சிரித்துக்கொண்டே.

"மாதச் சம்பளம் எப்போது வரும் என்று காத்துக்கொண்டேயிருப்பார்கள். வந்ததும், சோப்பு, பல் தேய்க்கப் பசை, மருந்துக்கடை பாக்கி, துணிக்கடைக் கடன் முதலியவற்றைக் கொடுத்துவிட்டு மீதியை நான் கைந்து நாட்களில் நாடகத்திலும் சினிமாவிலும் ஹோட்டலிலும் செலவழித்துவிடுவார்கள். அப்புறம் எங்கேயாவது கடன் கிடைக்காதாவென்று பார்த்துக்கொண்டிருப்பார்கள் — ராசா, இங்கே நீ ஒரு விஷயம் கவனிக்க வேண்டும். முன்பு அவர்களுக்கு நிலத்தில் ஏதோ கொஞ்சம் வருமானம் கிடைத்தது. அதை வைத்துக்கொண்டு திருப்தியாகவும் சுகமாகவும் வாழ்ந்தார்கள். இப்போது நல்ல சம்பளம் கிடைத்தது. வருஷத்துக்கு மூன்று நான்கு போனஸ் கிடைத்தது. ஆனால் அவ்வளவு வந்தும் செலவுக்குப் போதவில்லை. வருமானத்துக்கு மேல் செலவு ஆயிற்று. ஏன்? அவர்களுடைய வாழ்க்கைத் தரம் இப்போது உயர்ந்துவிட்டது! வாழ்க்கையில் முன்பு அவர்கள் இருந்ததை விட இப்போது நல்ல

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

தமிழர் எப்போது ஈழநாட்டுக்கு வந்தார்கள்? அறுநூறு ஆண்டுகளுக்கு முன்தான் என்று நேரு அவர்கள் டில்லி சபையில் தெரிவித்தது சரியா? என்று, முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. அவர்கள் நேற்று 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்து கதைத்தபோது அவரைக்கேட்டேன்.

"தமிழர் இங்கு வந்தவர்களல்லர். இருந்து வருபவர்கள்" என்றார் அவர். எப்படி? என்று கேட்டதற்கு, "தமிழ் நாடும் ஈழநாடும் முன்னர் ஒன்று சேர்ந்தே இருந்தன. கோடிக்கரை, வேதாரண்யம் இப்பகுதிகளையும் யாழ்ப்பாணத்தையும் பார்த்தால் இரண்டும் ஒன்று போலவே இருக்கின்றன. இரு பகுதிகளிலுள்ள மக்களும் தமிழர், சைவர்கள். மரம் செடி இயற்கை சூழ்நிலை எல்லாம் ஒரேமாதிரி.

தமிழரெல்லாம் ஒன்று சேர்ந்து விட்டால் உலகமே தாங்காதென்று இயற்கையன்னை நினைத்தாளோ என்னவோ, ஒரு சிறிய கடல் குறுக்கிட்டு பிரித்து விட்டது அள்வளவுதான்.

1800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழன் ஈழநாட்டிலிருந்திருப்பதற்கு சரித்திர ஆதாரமுண்டு. நேரு அவர்கள் அறிவாளிதான். ஆராய்ச்சியாளர். ஆனால் இவ்விஷயத்தில் அவர் ஆராய்ச்சி செய்யாமல் பிறர் யாரோ கூறியதை அப்படியே சொல்லியிருக்க வேண்டும்" என்றார்.

* * *

உலகத்திலேயே மிகப் பெரிய குடும்பம் யாருடையது தெரியுமா? திருச்சியிலுள்ள கி. ஆ. பெ. அவர்களுடையதுதானும்! அவர் தகப்பனுருக்கு 16 குழந்தைகள். அதில் கடைக்குட்டிதான் நமது காவலர். அவருக்கும் 16 குழந்தைகள். அதில் ஐந்து பெண்களுக்கு ஆளுக்கு 12 குழந்தைகள்! உலகிலே பெரிய 'குடும்பி' என்று தம்மை நினைத்துவந்த ஒரு ஜெர்மனியர், திருச்சிக்கு வந்து பார்த்துவிட்டு, கி. ஆ. பெ யின் குடும்பமே மிகப் பெரிது என்று ஒப்புக்கொண்டாராம்!

* * *

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி தங்கள் கருத்தென்ன? என்று அவரைக் கேட்டேன். "இது அவரவர்களுடைய தேக நிலை, வசதி இவற்றைப்பொறுத்தது. பொதுவாக எல்லாருக்குமாக ஒரு விதியை ஏற்படுத்த முடியாது. எனது மருமகள் ஒருத்திக்கு உடல் நிலை அவ்வளவு சரியில்லாததால் இரு குழந்தைகளுடன் நிறுத்திக்கொள்ளுமாறு நானே கூறிவிட்டேன். சில எளிய குடும்பத்தார், அதிக குழந்தைகள் இருப்பது தங்கள் வருவாய்க்கும் பொருளாதாரத்துக்கும் நல்லதென்று கருதுகின்றனர். சில குடும்பத்தார் அதிக குழந்தைகள் அதிக பளுவென்று கருதுகின்றனர். ஆகவே அவரவர்களே தங்கள் தேவையையும் வசதியையும் கருதி இதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

* * *

அவருடன் அவரது துணைவியாரும் வந்துள்ளார்கள். தமிழ்ப்பெண்ணுக்குரிய எல்லாப் பண்புகளுடனும் கூடிய அவர்களைப் பார்த்தால் 16 குழந்தைகள்பெற்ற தாய்மாதிரி இல்லை. அவர்கள் இலங்கைக்கு வருவது இதுவே முதல்தடவையாம். இலங்கை தமக்கு மிகவும் பிடித்திருப்பதாயும் இங்குள்ள மக்களின் அன்பு நம்மை கவர்ந்துவிட்டதாயும் தெரிவித்தார்கள்.


இருவரும் நேற்று கொழும்புக்குப் புறப்பட்டனர். இலங்கை வானொலியில் இரு பேச்சுகளை முத்தமிழ் காவலர் பதிவு செய்துவிட்டு, திருச்சிக்குத் திரும்புவாரென்றும்தெரிகிறது.

# பிரதமர் சிறிமா அமெரிக்கா செல்வார்

அமெரிக்கா, ஜூன் 6

பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இவ்வருட இறுதியில் அமெரிக்காவுக்கு வரலாம் என அமெரிக்காவில் தற்பொழுது சுற்றுப் பிரயாணம் செய்யும் இலங்கை பார்லிமெண்ட் தூதுகோஷ்டியின் தலைவர் திரு. சி. பி. டி' சில்வா தெரிவித்தார்.

அமெரிக்க பத்திரிகையாளர் சங்கக்கூட்டமொன்றில் பேசுகையிலேயே திரு. ஸி. பி. டி' சில்வா மேற்கண்டவாறு வெளியிட்டார். செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூடும்போது பிரதம மந்திரி நியூயார்க் வருவார். அவர் ஐக்கிய அமெரிக்காவின் இதர பகுதிகளுக்கும் செல்வார்" என்று திரு. சில்வா கூறினர்.



## நல்லூரில் நாளை தண்டிகை உற்சவ கற்பூரத் திருவிழா

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நாளை வியாழக்கிழமை வருஷாபிஷேகம். காலையில் சங்காபிஷேகமும், மாலையில் ஊஞ்சல், தண்டிகை திருவிழாவும் நடைபெறும். இரவில் கற்பூரச் சட்டிகளைத் தாங்கிக்கொண்டு பல பக்தர்கள், தண்டிகை திருவிழாவில் செல்வது கண்கொள்ளாக்காட்சியாகும். ஊரடங்குச் சட்ட காரணங்களால், இத்திருவிழாவை இம்முறை வழக்கத்துக்கு முன்னதாகவே அதாவது இரவு 7 மணிக்கே நடத்த ஒழுங்குசெய்துள்ளனர். அதிகாரிகளுடன் இப்படியாக கோவில் நிர்வாகிகள் கலந்து பேசியதன் பயனுக, இந்த உற்சவத்தன்று பக்தர்கள் தரிசனம் செய்துவிட்டு சுற்றுவட்ட இடங்களுக்குச் செல்ல வசதிகள் செய்யப்படுமென்றும், அன்று காவல்கெடுபிடி சற்றே தளர்த்தப்படலாமென்றும் தெரிகிறது.

### கல்வி மந்திரிக்கு

(1-ம் பக்கத் தொடர்சி)

ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மோசமான நிலைக்கு வந்துள்ளது. சில பாடசாலைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு, வழக்கமாக கொடுக்கப்படும் சம்பளம் கொடுக்கப்படாமல், பாடசாலைகள் நேரடி நிர்வாகத்தின் கீழ் வருமுன்னர் வழங்கப்பட்டு வந்த சம்பளத்திலும் பார்க்க குறைவாகவே வழங்கப்படுகின்றது.

பாடசாலைகள் நேரடி நிர்வாகத்தின் கீழ் வந்த பின்னர் இப்பாடசாலைகளில் கடமையாற்றும் சில்லறை ஊழியர்களின் சம்பளத்தில் குறைவு ஏற்பட்டதற்கு காரணம், இவ்வூழியர்களுக்குரிய போதுமான அளவு சம்பளத்தை கல்வி இலாகா அனுப்பத் தவறியதே என்பதை நாங்கள் அறிவோம்."

### கைதிகளின் பாதுகாப்புக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைக்கமிஷனருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கைதிகள் பற்றி பத்திரிகைகளுக்கும் செய்தி கொடுக்கப்படக்கூடாதென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆரம்ப நடவடிக்கையாக இந்த மூன்று கைதிகளுக்கும் விசேஷ உத்தியோகத்தர்களை ஒழுங்கு செய்வதென்றும் பொறுக்கியெடுக்கப்பட்ட சில அதிகாரிகளிடம் இக்கைதிகளைக் கவனிக்கும் பொறுப்பை ஒப்படைப்பதென்றும் சிறைச்சாலைக் கமிஷனர் தீர்மானித்துள்ளார்.

### 8ம் தேதி ஆகாசவாணி வெள்ளி விழா

புதுடில்லி, ஜூன் 6

வருகிற 8ம் தேதி ஆகாசவாணியின் வெள்ளிவிழா கொண்டாடப்படும். முதன் முதல் 1936ம் ஆண்டு ஜூன் மாதம் 8ம் தேதி "இந்தியன் ஸ்டேட் ஒலிபரப்பு சேவை" என்றிருந்த பெயர் "அகில இந்திய ரேடியோ" என மாற்றம் செய்யப்பட்டது. வருகிற 8ம் தேதியுடன் அகில இந்திய வானொலிக்கு 25 ஆண்டுகள் பூர்த்தியாகிறது. பாகிஸ்தான் பிரிவினையின்போது இந்தியாவில் 6 ஒலிபரப்பு நிலையங்களே இருந்தன. இப்போது 28 நிகழ்ச்சி நிலையங்களும் 60 டிரான்ஸ்மீட்டர்கள் மூலம் செயல்படுகின்றன.

### டொமினிக்கன் குடியரசு நிலை

#### ஆராய தூதுகோஷ்டி

வாஷிங்டன், ஜூன் 6

டொமினிக்கன் குடியரசிலுள்ள நிலைமையை ஆராயும் பொருட்டு அமெரிக்க நாடுகளின் ஸ்தாபனம், அங்கு ஒரு தூதுகோஷ்டியை அனுப்ப இருக்கிறது. இத்தூதுகோஷ்டி அமெரிக்கர் ஒருவரின் தலைமையில் செல்லும்.

### மந்திரிக்கு வரவேற்பு கொடுப்பது எப்படி?

#### மைசூர் அரசாங்கம் உத்தரவு!

பெங்களூர், ஜூன் 6

மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது அவர்களுக்கு பொதுமக்களும் அதிகாரிகளும வரவேற்புக் கொடுப்பது பற்றி மைசூர் ராஜ்ஜிய அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.

இதன்படி (1) மந்திரிகளுக்கு பொலிஸ் அணிவகுப்பு மரியாதை நடத்தக்கூடாது. (2) பந்தல் போடக்கூடாது. தோரணம் கட்டக் கூடாது. மாலை அணிவிக்கக் கூடாது. (3) விருந்து, தேநீர் விருந்து ஆகியவற்றை அதிகாரிகள் நடத்தக் கூடாது. (4) மனு, வரவேற்பு இதழ்கள் ஆகியவற்றை கையில் எழுதித்தான் மந்திரியிடம் கொடுக்க வேண்டும். அச்சிடக்கூடாது.

இவ்வாறு மைசூர் அரசாங்கம் கட்டளையிட்டிருக்கிறது.

### இலங்கையின் தலைநகரம் அனுராதபுரம்?

கொழும்பு, செவ்வாய்

அனுராதபுரம் இலங்கையின் தலைநகரமாக்கப்பட்டால், அதனுல் ஏற்படக்கூடிய சௌகரியங்கள் பற்றிய மகஜரொன்றை அனுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. நிசங்கா விஜயரத்ன, இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார்.

இவ் யோசனையை அரசாங்கம் விரைவில் பரிசீலனை செய்யவிருக்கிறது.

திரு. நிசங்கா விஜயரத்தின அரசாங்கத்திற்கு அனுப்பிய மகஜரில், அனுராதபுரத்தை இலங்கையின் தலைநகரமாக்கி, கொழும்பை வர்த்தக விவகாரங்களுக்காக ஒதுக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

## கானு ஜனதிபதி யோசனையை நேரு நிராகரித்தார்

புதுடில்லி, ஜூன் 6

காங்கோவுக்குப் படைகள் அனுப்பிய நாடுகளைக்கொண்ட ஒரு மகாநாட்டை ஆக்ராவில் கூட்டவேண்டுமென்றும், காங்கோ பார்லிமெண்டைக் கூட்டுவதுபற்றி இம்மகாநாடு ஆராயவேண்டுமென்றும் கானு ஜனதிபதி டாக்டர் நிக்ருமா தெரிவித்த யோசனையை இந்தியப் பிரதமர் நேரு நிராகரித்துவிட்டார்.

டாக்டர் நிக்ருமா இலங்கை உள்ளிட்டு 20 நாடுகளுக்கு இது சம்பந்தமாகக் கடிதம் எழுதியிருந்தார்.

இவ்வித மகாநாடு எவ்வித பயனும் அளிக்கப்போவதில்லை என்றும், காங்கோவில் இப்போது படிப்படியாக மாமூல் நிலை ஏற்பட்டு வருவதாயும் இந்தியப்பிரதமர் கூறினர்.

### வேண்டாம் இந்த டாம்பிகம்

புதுடில்லி,, ஜூன் 6

ஆயிரக் கணக்கில் மின்சார விளக்குகள் ஜொலிக்க பாண்டு வாத்திய முழக்கத்துடன் நடைபெறும் கல்யாணத்தை கண்டாலே இப்பொழுது நேருவிற்கு பிடிப்பதில்லை.

"என்ன ஆடம்பரம் வேண்டிக் கிடக்கின்றது. இதெல்லாம் கீழ்தரமான வீண் பகட்டு. டில்லியில் இப்பொழுது மின்சார சப்ளை குறைவாக உள்ள காலத்தில் இம்மாதிரி தீபாலங்காரங்கள் செய்வது வெறும் டாம்பீகம் தான்" என்று திரு. நேரு கூறியுள்ளார்.

## கென்னடி வாஷிங்டன் திரும்பினர்

வாஷிங்டன், ஜூன் 6

அமெரிக்க ஜனதிபதி கென்னடி பாரிஸ், லண்டன்,வியன்னு ஆகிய நகரங்களுக்கு விஜயம் செய்தபின் இன்றிரவு வாஷிங்டன் திரும்புகிருர். அவருக்கு மகத்தான வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. துணை ஜனதிபதி திரு. லிண்டன் ஜான்ஸன், மந்திரிகள், காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஆகியோர் விமான நிலையத்தில் அவரை வரவேற்பார்கள்.

மாஸ்கோவில் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னேவுக்கு அளிக்கப்பட்ட விருந்தில் குருஷ்சேவ்-கென்னடி சம்பாஷணையை ரஷ்ய ஜனதிபதி வரவேற்றுப் பேசினர்.

உலக மக்கள் அனைவரும் இச் சம்பாஷணையை வரவேற்பதாயும், இரு தலைவர்களின் கருத்துப் பரிவர்த்தனை உபயோகமாய் இருந்ததென்றும் அவர் கூறினர்.

### அல்ஜீரியாவுக்கு உதவ வேண்டுகோள்

போராடும் அல்ஜீரியாவுக்கு ஆதரவு தர இலங்கை மக்களை வேண்டிக்கொள்ளும் அறிக்கையொன்று இவ்வாரம் வெளியிடப்பட்டது. திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக்கா (உள்நாட்டு அமைச்சர்), டட்லி சேனநாயக்கா (எதிர்க்கட்சித் தலைவர்) டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர்கெனமன், எஸ். தொண்டமான் ஆகிய தலைவர்களின் கைச்சாத்துடன் இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### கேரளமந்திரி ஸ்ரீ. சங்கர் அமெரிக்கா செல்கிறர்

திருவனந்தபுரம், ஜூன் 6

கேரள உதவி முதன் மந்திரி ஸ்ரீ. ஆர். சங்கர் விரைவில் இருமாதகால வெளிநாட்டுச்சுற்றுப் பிரயாணத்தை மேற்கொள்வார்.

## காரியாலய உதவியாளர் நியமிக்கப்படவில்லை

### உள்நாட்டு மந்திரிக்கு அரசாங்க அதிபர்கள் புகார்

கொழும்பு, செவ்வாய்

காரியாலய உதவியாளர்களுக்கான காலியான இடங்கள், இன்னும் நிரப்பப்படாத காரணத்தினுல், நடைமுறையில் எவ்விதமான வேலைகளும் தங்களது கச்சேரிகளில் நடைபெறவில்லையென்று கைத்தொழில் உள்நாட்டு கலாச்சாரமந்திரியிடம் சில அரசாங்க அதிபர்கள் முறையிட்டுள்ளனர்.

கச்சேரிகளில் நடைபெறும் வேலைகள் உதவியாளர்களிடம் தான் தங்கியிருக்கிறதென்றும், அண்மையில் 7 கச்சேரிகளைச் சேர்ந்த உதவியாளர் ஓய்வு பெற்றுள்ளனர். ஆனுல் அவர்களுக்குப் பதிலாக இன்னும் எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் கைத்தொழில் உள்நாட்டு கலாச்சார மந்திரிக்கு அரசாங்க அதிபர்கள் முறையிட்டுள்ளனர்.

### சம்பத்துக்கு அண்ணுத்துரை சவால்

சென்னை, ஜூன் 6

தமிழ் தேசிய கட்சித் தலைவர் ஈ. வே. கி. சம்பத்துக்கு திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் சி. என். அண்ணுத்துரை சவால்விட்டிருக்கிருர்.

தைரியம் இருந்தால், சுதந்திரத்தமிழ்நாடு என்று சம்பத் சொல்லட்டும் என்று அண்ணுத்துரை சவால் விடுத்தார்.

சென்னை அண்ணுப்பிள்ளை தெருவில் நடந்த கூட்டத்தில் அண்ணுத்துரைபேசியதாவது:-

"திராவிட தேசியம் மாயை என்கிருர், சம்பத்! இந்திய தேசியத்தையும் மாயம் என்கிருர்!!

சம்பத்துக்கு கொள்கை தெளிவு இல்லை! ஆகவேதான் அவரை ஆதித்தனுரோ, சிவஞானமோ சேர்த்துக்கொள்ள மறுக்கிருர்கள்! நேருகூட சம்பத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

திராவிடநாடு கொள்கையை விட்டுவிட்டேன் என்ருல், நேரு வரவேற்பார்! இப்பொழுது என்ன கொள்கை என்றுகேட்பார்! கொள்கையைக் கூறினுல் அவர்கூட ஏற்கமாட்டார்.

"ஏக இந்தியாவில் இருப்போம்! ஆனுல், சேரும்போதே பிரிந்துபோகும் உரிமையைப் பெற்றுக்கொள்வோம்!" என்று சம்பத் சொல்லுகிருர்!

தாலிகட்டப் போகும்போதே "என்னைக் கொடுமைப்படுத்தினுல், அம்மாவீட்டுக்குப் போய் விடுவேன்!" என்றுமாப்பிள்ளையிடம் மணப்பெண் கூறுவது போல இது இருக்கிறது.

கடையை விட்டு விலகிய சிப்பந்தி, 'அந்தக்கடையில் படிக்கல் அப்படி, திராசு இப்படி!" என்று ஊராரிடம் சொல்லிக்கொண்டு திரிவார்! சம்பத்தும் அப்படித்தான் பேசிக்கொண்டு இருக்கிருர்.

'முன்பு அந்தக்கடையில் தானே இருந்தாய்?' என்று கேட்டால், 'அது அப்படித்தான்' என்று சொல்வார்கள். இப்படித்தான் சம்பத்தும் சொல்கிருர்,

குருடன் பார்வை பெற்ருல், நல்ல மாறுதல், நல்லகண் பார்வை இழந்தால் கெட்ட மாறுதல். சம்பத்து இப்பொழுது அடைந்து இருப்பது கெட்ட மாறுதல்.

என்னைப்பற்றி எத்தனையோ பேர்கள் எவ்வளவோ சொன்ஞர்கள். அதைத்தான் இப்பொழுது சம்பத்தும் சொல்கிருர்.

'பத்தோடு பதினென்று' அத்தோடு இது ஒன்று! என்று நான் நான் கருதுகிறேன்.

இவ்வாறு அண்ணுத்துரை கூறினர்.

### மான நஷ்ட வழக்கில் மே. பேர்லின் மேயர் வெற்றி

பெர்லின், ஜூன் 6

ஒரு பத்திரிகை ஆசிரியரை எதிர்த்து, 30,000 மார்க் நஷ்டஈடு கோரி மேற்கு பெர்லின் மேயர் திரு. வில்லிபிராண்ட் தொடர்ந்த மான நஷ்ட வழக்கில் அவர் வென்ருர். பிராடஸ்டண்ட் சர்ச்சின் "உலகுக்கு உணவு" நிதியில் அத்தொகையை சேர்க்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

மேயர் ஒரு நாஸ்திகர் என்றும் கம்யூனிஸ்ட் என்றும், புகார் கூறக்கூடாது என்று நீதிபதி உத்தரவிட்டார். தீர்ப்பு முழுவதையும் தலையங்கத்துக்குப்பதிலாக பிரசுரிக்க வேண்டும் என்றும் ஆசிரியருக்கு அவர் உத்தரவிட்டார்.

# தமிழ்ப்பிரதேசங்களுக்கு

## ஒரு வானொலி நிலையம்

### யாழ்ப்பாண எம். பி. நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

"தமிழ்ப் பேசும் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் ஒரு கவின் கலைக் கல்லூரியும், ஆயுள்வேத மருத்துவ நிலையமும், வானொலி நிலையமும் நிறுவப்படவிருக்கிறது. இவைகள் இந்த ஆண்டுக்குள்ளோ அன்றேல் அடுதத நிதிவருடத்துக்குள்ளோ பூர்த்தியாகலாம். இதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறன்" இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. துரையப்பா அவ்வறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-

தமிழ் மொழி உரிமைக்காகப் போராடிவரும் அதேவேளையில் எமது தேவைகளையும் அதற்குக் கிடைக்கக் கூடிய உதவிகளையும் உரிமையுடன் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். கிடைக்கக் கூடிய உதவிகளை கைவிடாது நமது நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியது அத்தியாவசியம்.

அவர் தமது அறிக்கையில் தமது தொகுதிக்கு இவ்வாண்டில் செய்து முடிக்க விருக்கும் வேலைகளைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அவையாவன:

கொழும்புத்துறைத் துறைமுகவேலைகள் பெரியளவில் விரைவில் பூர்த்தியாக்கப்படும்.

கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகாவினுல் ஒரு சில்லறைக்கடை யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கென ஒரு பிரசவ ஆஸ்பத்திரி அமைத்தல் இவ்வேலை இதற்குரிய நிலம் வழங்கப்பட்டதும் தொடங்கப்படும்.

குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களுக்கான ஒரு மீன் விற்பனவுச் சந்தை திறக்கப்படவிருக்கின்றது. இத்துடன் யாழ்ப்பாணத் தொகுதியில் இரண்டு உபதபாற் கந்தோர்களும் திறக்கப்படவிருக்கின்றன.

ஏழைகளுக்கான ஒரு வீடமைப்புத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இவ்வேலைகள் பெரும்பாலும் அடுத்த நிதிவருடத்துக்குள் பூர்த்தியாகிவிடுமென அவர் அவ்வறிக்கையில் நம்பிக்கை தெரிவித்தார்.

## ஸி.ஸி.எஸ்: ஆதிக்கம் குறைக்கப்படுகிறது

கொழும்பு, செவ்வாய்

வர்த்தக போக்கு வரத்து அமைச்சின் உதவிக்காரியதரிசியாக நியமிக்கப்பட்ட மத்திய வங்கியைச் சேர்ந்த டாக்டர் ஜே. பி. கெலகமவே ஸி. ஸி. எஸ். பட்டம் இன்றி இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது உத்தியோகஸ்தர். இதுவரை ஸிவில் சேர்விஸ் பட்டம் பெற்றவர்களே இப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

ஸிவில் சேர்விஸ் உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட பதவிகள் அரசாங்க சேவையில் சேவை செய்பவர்களுக்கும், அரசாங்கசேவையில்லாது வெளியில் சேவை செய்பர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கைக்கிணங்கவே இப்பதவி டாக்டர் கெலகமவுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## "கதைகள் காவக்கூடாது"

### பொலிஸ் அதிகாரி புத்திமதி

மாத்தளை, திங்கள்

"இங்கிலாந்து போன்ற நாடுகளில் பொலிசாரை பொது மக்கள் நண்பர்களாக மதிக்கிருர்கள். இங்கு பொலிசாருக்கு அடிக்கடி கத்திகளினுல் தான் வரவேற்புக் கிடைக்கிறது" என்று மாத்தளை பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. ஆர். பி. வீரசேகரா மாத்தளை விஜயா கல்லூரி மாணவர்கள் மத்தியில் பேசுகையில் கூறினுர்.

"கட்டுக்கதைகள் காவுவது, வதந்திகளைப்பரப்புவது, அடிக்கடி அயலவர்களிடையே சண்டையை மூட்டிவிடுகிறது. பெண்பிள்ளைகள் கதைகளைக் காவக்கூடாது" என்று இன்ஸ்பெக்டர் கூறினுர்.

பதவியா

## 120 தொழிலாளருக்கு வேலைநீக்க நோட்டீஸ்

கொழும்பு, செவ்வாய்

பதவியாக் குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த 120 தொழிலாளர்களுக்கு நீர்ப்பாசன இலாகா வேலைநீக்க நோட்டீஸ் வழங்கியுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு அகில இலங்கை ஐக்கிய நீர்ப்பாசன தொழிலாளர் யூனியன் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

நான்கு வருடங்களுக்கு மேலாக நீர்ப்பாசன இலாகாவில் சேவைசெய்தவர்களை வேலைநீக்கம் செய்வதற்கு சில அதிகாரிகள் எடுத்துள்ள நடவடிக்கை இதுஎன்று யூனியன் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஐந்து வருடம் சேவைசெய்த தொழிலாளர்களின் சேவை நிரந்தரமாக்கப்படும். இவர்கள் நிரந்தரமாக்கப்படுவதைத் தடுக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யூனியன் அதிகாரி கூறினுர். வேலைநீக்க நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் சம்பந்தமாக தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு மதவாச்சித் தொகுதி எம். பி. யும் உள்நாட்டு கலாசார விவகார அமைச்சருமான திரு. மைத்திரிபால சேனநாயக்காவை யூனியன் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர்.

# மதஸ்தாபனங்களுக்கு

## ரூ. 5லட்சம்

### கலாசாரஇலாகா வழங்கியது

கொழும்பு, செவ்வாய்

பல்வேறு சமய விவகாரங்களுக்குமாக சென்ற வருடத்தில் பௌத்த, இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவசபைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேல் கலாசார விவகார அமைச்சு நிதிவழங்கியுள்ளது.

'தம்ம' பாடசாலைகளை நடத்துவதற்காகபௌத்த இளைஞர் சங்கத்துக்கு 50,000 ரூபாய்வழங்கப்பட்டது. இத்துடன் இப் பாடசாலைகளுக்கென 183,632 ரூபாய் பெறுமதியான 631.085 புத்தகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சமய சபைகளல்லாத ஸ்தாபனங்களும் உதவி பெற்றன. இவைகளில் தாழ்ந்த பிரதேசம், மலைநாட்டைச் சேர்ந்த 89 'கலாயத்தனயா'க்களும், 17 இந்திய நாட்டிய பாடசாலைகளும், 22 'சித்திரமூர்த்தி' கலாசார நிலையங்களும், 25 இந்திய சங்கீத பாடசாலைகளும், 10 சப்ரகமுவ நடன பாடசாலைகளும் இடம்பெறும் இவைகளுக்கு மொத்தம் 106.202 ரூபாய் வழங்கப்பட்டது.

இலங்கைக் கலைக் கழகம் வருடம் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடைபெறுகிறது.

## 120 வயதுக் கிழவர் வாக்களித்தார்

கட்டாக், ஜூன்

ஒரிஸாவில் நடைபெற்ற தேர்தலில் சில குருடர்களும் வாக்களித்தனர். இச்சம்பவம் போலான்கீர் ஜில்லாவிலுள்ள காந்தாபான்ஜி தொகுதியில் நடைபெற்றது. வாக்காளர் நிலயத்திலிருந்த அதிகாரிகள் உதவிபுரிந்தனர்.

120 வயதுள்ள ஒரு கிழவரும் தனது பேரனின் உதவியுடன் வந்து வாக்குப் பதிவு செய்தார்.

## கார்ப்பரேஷனை இணைக்கும் மசோதா

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க சேவையுடன் கார்ப்பரேஷனை இணைக்கும் மசோதா ஒன்றை நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா சமர்ப்பிக்கவிருக்கிருர்.

அரசாங்க கார்ப்பரேஷனிலுள்ள எந்த உத்தியோகஸ்தரையும் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரின் சம்மதமில்லாமல் நீதிமந்திரி தனது விருப்பத்துக்கிணங்க வேறு இலாகாவுக்கு மாற்றும் அதிகாரத்தை இம்மசோதா அளிக்கிறது.

திறமைமிக்கவரின் சேவையைப்பெறவே அரசாங்கம் பெறவே இந்த மசோதா கொண்டுவரப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது.

## இ. போ. ச. தொழிலாளர் பிரதிநிதிகள்

### நிர்வாகசபையில் நியமிக்க திரு. ஜே. ஆர். யோசனை

பாணந்துறை, திங்கள்

"இப்பொழுதுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையைக் கலைத்துவிட்டு சபையின்தொழிலாளர் பிரதிநிதிகளையும் கொண்ட புதியசபையை நியமிக்கவும்" என்று கொழும்பு தெற்கு முதலாவது எம்.பி.யும், யூ. என். பி. பிரமுகருமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, ஜாதிகசேவக சங்கத்தின் பாணந்துறைக் கிளையின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

"பஸ் முதலாளிகள் ஆரம்பத்தில் தாழ்ந்த நிலையிலிருந்து பின்னர்தார் முதலாளிகளாகி பஸ் கம்பனிகளையும் ஸ்தாபித்தனர். அவர்களுடைய அனுபவம் அவர்களுக்குப் பெருமளவு இலாபத்தைக் கொடுத்தது. அவர்கள் தங்கள் தொழிலையும் வெற்றிகரமாக நடத்தினர். 'பஸ்' சேவையை அரசாங்கம் எடுத்ததும் அனுபவமுள்ளவர்களுக்குப் பதில் அனுபவமில்லாத உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இதுதான் நஷ்டமேற்படுவதற்குக் காரணம்" என்று திரு. ஜயவர்த்தன கூறினுர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பதினுன்காயிரத்துக்கு அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிருர்களென்றும் இவர்களின் பிரதிநிதிகளைச் சபையில் சேர்த்துக்கொள்ள அரசாங்கத்துக்கும் வரியிறுப்பாளர்களுக்கும் நன்மை கிடைக்குமென்றும் திரு. ஜயவர்த்தன கூறினுர்.


யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!

உங்கள் காப்பியின் தரம்
குணம், மணம்
எந்நாளும் ஒரேவிதமாக அமைகிறதா?

இதோ நாங்கள் பெரும் பணச்செலவில்
தருவித்துள்ள நவீன

எலக்ரிக் ரேஸ்டர்

மூலம்

14 ருத்தலுக்குக் குறையாமலும் அதற்கு மேலும்
உங்களுக்குத் தேவையான காப்பியை வறுத்து
அரைத்து அரை மணி நேரத்தில் குணம், மணம்
நிறைந்த காப்பித்தூளைத் தருகிறோம்.

ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்!

குறைந்த செலவில் குறித்த நேரத்தில்
காப்பித்தூள் தயாரிக்கப்படுகிறது!

Mohamedally Abdullaly
முகம்மது அலி அப்துல் அலி

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515

# இலங்கையில் புதிய வானெலி நிலையம்

## கொழும்புத் திட்டத்தின் கீழ் கூட்டமைப்பு

கொழும்பு, திங்கள்

கொழும்பில் கட்டப்படும் புதிய வானெலி—ஓரிடமூலக நிலையத்திற்கு ரூபா 30,000 பெறுமதியுள்ள ஆய்வுகூட சாதனங்கள் கொழும்புத் திட்டத்தின், நுண்தொழில் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகின்றன.

இந்நிலையம், இலங்கை அரசாங்கம், சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி, பிரிட்டன் ஆகிய மூன்றின் கூட்டுறவில் அமைக்கப்படும் திட்டமாகும்.

கொழும்பு, தேஸ்டன் வீதியில் உள்ள சர்வகலாசாலைத் திடலில் விசேஷமாகக் கட்டப்பெற்ற கட்டிடத்தில் இந்நிலையம் இடம்பெறும். வாசிகசாலை, உரை நிகழ்த்தும் கூடம், ரேடியோ ஐஸதோப் கையாளும், எண்ணும்ஆய்வு கூட்டங்கள், இன்னும் பல்வேறு வசதிகளையும் இந்நிலையம் கொண்டிருக்கும். இவ்வருடம் ஆகஸ்ட் மாதம், இக்கட்டிடங்கள் பாவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம், கட்டிட அமைப்புக்கும், அதன் தளபாடங்களுக்கும், அதன் எதிர்கால குழுவினருக்கும் பொறுப்பாயிருக்கும் என்று தெரிகிறது.

சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி, பிரிட்டிஷ் விஞ்ஞானியான டாக்டர் எப். எச். கென்டாலை, இத்திட்டத்தினதும் அணுசக்தி சாதனங்களினதும் ஆலோசகராகக் கொடுத்துள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கம் றேடியோ லொஜிக்கல் அளவு கருவிகள், இருட்டறைக் கருவிகள், விசேஷஓரிடமூலக சாதனங்கள், றேடியோ அக்டிவ் வசதிகள் போன்றவைகளைக் கொடுக்கும்.

இத்திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்ததும வைத்தியம், விவசாயம், பௌதிகம், இரசாயனம், நுண்தொழில், கைத்தொழில் ஆகிய துறைகளில் பயிற்சி கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

இந்நிலையத்தின் பொறுப்பாளராக இலங்கை சர்வகலாசாலையின் இரசாயன இலாகாவைச் சேர்ந்த டாக்டர் பி. பி. ஜி. எல். சிறிவர்த்தன இருப்பார். தற்சமயம் இவர் ஐஸதோப்புகள்பற்றி பயிற்சி பெறுவதற்காக பிரிட்டனில் இருக்கிறார்.

## கொள்ளையடித்ததாக வழக்கு

சாவகச்சேரி, செவ்வாய்

சாவகச்சேரி தெற்கு வாசி சின்னையா சண்முகலிங்கம் என்ற சுருட்டு வியாபாரியை வழிமறித்து அவரிடமிருந்த 555 ரூபாயைக் கொள்ளையடித்ததாக பொன்னன் செல்லையா, சரவணை கந்தையா என்ற பரமு, கந்தன் இரத்தினம், சோமு சின்னத்தம்பி எனப்படும் யப்பான் ஆகிய நால்வரிலும் குற்றஞ்சாட்டிப் பொலிசார் தொடர்ந்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகளை 750 ரூபாய் பிணையில் செல்ல உத்தரவிட்டு விசாரணையை இம்மாதம் 16-ந் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார்.

## பேராசிரியர் மறைவுக்கு அனுதாபம்

வேலணை, செவ்வாய்

வேலணை மத்தியகல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினர் சார்பில் பேராசிரியர் ா. பி. சேதுப்பிள்ளையின் மறைவையொட்டிய அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

## இஸ்லாமிய பாடசாலையில் தாகூர் விழா

அக்கரைப்பற்று, செவ்வாய்

"கல்விக்கும் தாகூருக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. தமது சாந்திநிகேதனத்தின் மூலம் ஒரு இலட்சியக் கல்வி முறையை இந்தியாவிற்கு மட்டுமல்ல முழு உலகிற்கும் அறிமுகம் செய்து வைத்தவர் தாகூர். மாணவர்களிடத்தில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் மிக முக்கியம். இதில்தான் சிறந்த கல்வி உண்டு என்று கூறினர். தாகூரைப் போற்றும்போது அவர் மாணவர்களுக்குக் காட்டிய வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது மாணவர்களின் மேலான கடமையாகும்." இவ்வாறு அக்கரைப்பற்று இஸ்லாமிய அரசினர் மகா வித்தியாலயத்தில் வித்தியாலயத் தலைவர் ஜனப் ரி. இபுருலெவ்வை தலைமையில் நடைபெற்ற தாகூர் நினைவுக் கூட்டத்தின் போது பேசுகையில் கல்முனை பாத்திமா கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். நடராஜா குறிப்பிட்டார். நினைவு தினத்தை ஒட்டி நடைபெற்ற கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியில்வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் பின்வருமாறு:—

பேச்சுப்போட்டி மேற்பிரிவு: எம். ஏ. சரிவுத்தீன், ஏ. அன்வர்அலி, எம். எஸ். அமீர். கீழ்ப்பிரிவு: எம். அகமதுலெவ்வை, எம். ஜமால்தீன், எம். மஹ்றூப்.

கட்டுரைப் போட்டி மேற்பிரிவு: எம். ஏ. சரிவுத்தீன், ஏ. அன்வர்அலி, ஏ. எம். அனிபா. கீழ்ப்பிரிவு: ஏ. எம். ஜமால்தீன், எம். ரி. ஜமால்தீன், எஸ். எம். முகைதீன்.

## வான்களின் விலை குறையுமா?

உடுப்பிட்டி, புதன்

ஏழுபேருக்குமேல் மோட்டார் வான்களில் பிரயாணிகள் செல்லமுடியாது தடுப்பதற்காக அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் சட்டத்தின் காரணமாக அநேக வான் சொந்தக்காரர் தங்கள் வான்களை விற்பதற்கு உத்தேசித்துள்ளனர். இதனல் வான்களின் விலை அதிகம் குறையலாமெனத் தெரிகிறது. இச் சட்டம்பற்றி ஒரு பொறுப்புள்ள பொலிஸ் அதிகாரியிடம் கேட்டபோது சட்டமியற்றப்பட்ட அடுத்த நிமிடமே பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்ய வேண்டியது மிக அவசியம் எனக் குறிப்பிட்டார்.

## டொமினிக்கன் மாஜி ஜெனரல் கொலை

### சர்வாதிகாரியின் கொலைக்கு காரணமாய் இருந்தவராம்

லண்டன், ஜூன் 6

டொமினிக்கன் குடியரசு சர்வாதிகார ரபைல் ருஜில்லோவின் கொலைக்கு திரைமறைவில் சதி செய்ததாகக் கருதப்படும் முன்னுள் ஜெனரல் சுவான் சென்ற ஞாயிற்றுக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜெனரல் சுவானும் அவரது சகாக்களும் ஒளித்திருப்பதாகத் தகவல் கிடைத்ததின் பேரில் அந்த இடத்துக்கு பொலிசார் சென்றதாகவும் அப்பொழுது பொலிசார் மீது சுடப்பட்டதாகவும் பொலிசார் இயந்திரத் துப்பாக்கியால் திருப்பிச் சுட்டதில் ஜெனரல் சுவான் கொல்லப்பட்டதாகவும் அவரது சகா ஒருவர் பலத்த காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

சர்வாதிகாரி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பலர் கைது செய்து காவலில் வைக்கப்பட்டதாக வெளி வந்த செய்திகளை அரசாங்க அதிகாரி ஒருவர் மறுத்தார்.

## நியுயோர்க்கில் திரு. பட்டீல்

நியுயோர்க், ஜூன் 6

இந்திய உணவுமந்திரி திரு. எஸ். கே. பட்டீல் நேற்று நியுயோர்க் வந்துசேர்ந்தார். சோவியத் ரஷ்யாவில் சுற்றுப் பிரயாணம் செய்து அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வாஷிங்டனுக்குச் சென்றபின் அங்கிருந்து நேற்று நியுயோர்க் வந்து சேர்ந்தார்.

# சர்வதேசக் கள்ளக்கடத்தல்

## தடுப்பதுபற்றி ஆராய கமிட்டி நியமனம்

கொழும்பு, செவ்வாய்

கொழும்புத் துறைமுகம் இரத்மலானை, கட்டுநாயக்கா விமான நிலையங்கள் மார்க்கமாக பெருமளவு பவுணும் அபினும் கடத்தல் செய்யப்படுவதைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். டபிள்யூ. எப். அபயக்கூன், பிரதம சுங்க கலக்டர் திரு. எம். எல். டி. கஸ்பர்ஸ், கலால் கமிஷனர் திரு. டி. பி. வடுகொடப்பிட்டியா ஆகியோரைக் கொண்ட ஒரு கமிட்டியை அரசாங்கம் நியமித்துள்ளது.

சர்வதேசக் கடத்தல் கூட்டத்துக்கு கொழும்பு ஒரு பிரதான துறைமுகமாகிவிட்டது என்று பாரிஸிலுள்ளசர்வதேச பொலிஸ் ஸ்தாபனம் ஒரு அறிக்கையில் தெரிவித்ததைத் தொடர்ந்தே இக்கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கள்ளக் கடத்தல் கூட்டத்தின் இலங்கை 'ஏஜண்டு'களைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் இப்பொழுது தீவிர முயற்சி செய்து வருகின்றனர்.

## வேலணையில் திருவள்ளுவர் திருநாள்

வேலணை, செவவாய்

வேலணை மேற்கு திருவள்ளுவர் ஜனசமூக நிலையத்தின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு வேலணை கிராமச்சங்கத் தலைவர் திரு.வி. கந்தசாமி தலைமை தாங்கினர்.

கூட்டத்தில் திருவாளர்கள் ச. சபாரத்தினம், த. இராமசாமி, மு. விஞசித்தம்பி, மு. ஆறுமுகம், ச. மாணிக்கவாசகர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## கைப்பந்தாட்டத்தில் இராணுவம் வெற்றி

உடுப்பிட்டி, புதன்

வதிரி டைமன்ஸ் கைப்பந்தாட்ட மைதானத்தில் வதிரிக் கோஷ்டிக்கும் இராணுவவீரர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில், இராணுவக் கோஷ்டி வதிரிக் கோஷ்டியை 3-0 கோல்களால் தோற்கடித்தது.

இராணுவக் கோஷ்டியில் ஆர். ஏ. சிறிவர்த்தன, மறதாரிஸ் ஆகியோரும் வதிரிக் கோஷ்டியில் மணிசுந்தரம் யோகச்சாமி, தர்மசிறி ஆகியோரும் நன்ருக விளையாடினர், வதிரி இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் எம். எஸ். கமலநாதன் மத்தியட்சகராகக் கடமையாற்றினர்.

## குழந்தைகளின் திரைப்படம்

சென்னை, ஜூன் 6

குழந்தைகள் திரைப்பட சங்கத்தினரால் இன்று திரையிடப்பட்ட 'குருபக்தி' என்ற படத்தை இந்திய வானெலி மந்திரி மத்திரி திரு. கேஸ்கர் ஆரம்பித்து வைத்தார்.

கல்விமந்திரி திரு. சி. சுப்பிரமணியம் இவ் வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

இப்படத்தில் பங்குபற்றிய குழந்தைகளுக்கும் டெக்னிஷியன் களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.


வெள்ளிக்கிழமை
9-ந் திகதி முதல் குதூகல ஆரம்பம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கும்பனித்தெரு)
மொடர்ன் (பதுளை)



பாலாஜி
பண்டரிபாய்
ராஜகோபால்
மைனுவதி
ஏ. கருணாநிதி
எம். சரோஜா
நடித்த
எங்கள் குலதேவி
டைரக்ஷன்: ஏ. சுப்பராவ்
சங்கீதம்: கே. வி. மகாதேவன்

2-வது வாரம்!
பிளாஸா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) விஜிதா (மஸ்கேலியா)
உதயகுமார், எஸ். வரலக்ஷ்மி, கண்ணும்பா, சூரியகலா நடித்த
ஜெய பவானி
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

கடைசி 4 தினங்கள் மட்டும்!
கிங்ஸ்லி (கொழும்பு)
எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
மணப்பந்தல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி, பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்
சிவாஜி கணேசன், சாவித்திரி, தங்கவேல் நடித்த
வணங்காமுடி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 5-30 மணிக்கு
சிவாஜி கணேசன் - பத்மினி நடித்த
பாக்கியவதி

தினசரி 2-00, 3-45க்கு — சனி, ஞாயிறு 10-30க்கும்
பிரிஜட் பாடோ நடித்த
வுமன் லைக் சேற்றன்
WOMAN LIKE SATAN
(ENGLISH)

# வாழ்க்கைத்தரமென்றால் என்ன?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைக்கு வந்துவிட்டார்களல்லவா? — ஆஸ்பத்திரி, ரேடியோ, காப்பி ஹோட்டல், உடையலங்காரம், பீடி, சிகரெட்;-இவையெல்லாம் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டதற்கு அறிகுறிகள் அல்லவ — இது இந்தியா முழுவது ஏற்பட வேண்டும் என்று ந நாட்டிலுள்ள பல அறிஞர்கள் நினைக்கிறார்கள். அதற்காக நம்முடைய அரசாங்கமும் பிரமாதமான பல திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்த வாழ்க்கைத் தரம் இன்னும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. தாகத்துக்கு அவர்கள் குடிப்பதுகூட, சுவை மிகுந்த மதுதான். அதைத் தாராளமாகக் குடித்து விட்டு கண்ட இடமெல்லாம் படுத்துப் புரள்வார்களாம். அவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது அவர்கள் வாழ்க்கைத்தரம்! இது போதாதென்று, இன்னும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்கள் இரவு பகலாக யோசனை செய்து வருகிறார்கள். இதில் ஒரே ஒரு கஷ்டம் இருக்கிறது. வாழ்க்கைத் தரம் உயர உயரப் பணம் அதிகமாக வேண்டியதாயிருக்கும். அதிருப்தி பெருகும்; சுகம் மறையும்; சந்தோஷம் ஓடிப்போகும்—உம், சுகமும் சந்தோஷமும் யாருக்கு வேண்டும்? வாழ்க்கைத் தரம்தானே உயர வேண்டும்? அதுதானே முக்கியம்?-என்ன ராசா, நான் சொல்லுவது சரிதானே?" என்று சொல்லி விட்டுத் தாத்தா பேரனை நோக்கினார்.

பேரன் திகைத்தான்.

"என்ன, நான் சொல்லுவது விளங்கவில்லையா?" என்று சொல்லிவிட்டுத் தாத்தா சிரித்தார்.

தாத்தா கேலி செய்கிறாரென்பதைப் பேரன் இப்போது தெரிந்துகொண்டான். அவனுக்கும் சிரிப்பு உண்டாயிற்று. "என்ன தாத்தா இது! சுகமும் சந்தோஷமும் இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை! அது தரம் உயர்ந்ததென்று எப்படிச் சொல்ல முடியும்?" என்றான்.

"உண்மை; ஆனால் உலகத்தில் பெரும்பாலான மக்களுக்கு அது தெரியவில்லையே! வெளிப்பகட்டையும் தேவைகளையும் பெருக்குவதில் தான் வாழ்க்கைத் தரம் இருக்கிறதென்று அவர்கள் நினைக்கிறார்கள். இதனால், யுத்தம், வறுமை, கவலை முதலியனவெல்லாம் ஏற்படுகின்றன. — நம்முடைய பாரததேசம் அறிவுக்குப் புகழ் பெற்றது அல்லவா? ஆகவே, இது தவறு என்பதை அது ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தெரிந்துகொண்டது. ஆகவே, உண்மையான வாழ்க்கைத் தரம் எது என்பதை ஆராய்ந்தது. கடைசியில், கண்டுபிடித்தது. நம்முடைய தமிழ் வேதமாகிய திருக்குறள் இதை அருமையாக எடுத்துச் சொல்லுகிறது—"

"திருக்குறளா?—நம்முடைய திருக்குறளா?" என்று கேட்டான் பேரன் வியப்புடன்.

"ஆமாம், ஆமாம். பள்ளிக்கூடத்தில் பாடமாக வைத்து விட்டதால் உனக்கு அதுபிடிக்கவில்லை—"

பேரனுக்கு வெட்கம்உண்டாயிற்று; அத்துடன் சிரிப்பும் வந்தது.

"பிடிக்கிறது; ஆனால் பரீட்சைக்கு வராமலிருந்தால் நன்றாயிருக்கும்" என்றான்.

"பார்த்தாயா? அந்தப் பரீட்சை கூட இந்த வாழ்க்கைத் தரத்தில் ஒன்றுதான். எப்படியாவது நான்கு புத்தகங்களைப் படித்துப்பட்டம் பெற்றுவிட்டால் போதும்; ஒருவனுக்குச் சமூகத்தில் மதிப்புக் கிடைத்து விடுகிறது."

"அப்படியானால் இந்தப் பாழாய்ப்போன வாழ்க்கைத் தரம் உயரவே வேண்டாம், தாத்தா!"

"வாழ்க்கைத் தரம் உயர வேண்டியதுதான்; ஆனால் அது உண்மையான வாழ்க்கைத்தரமாயிருக்க வேண்டும் — திருக்குறள் என்ன சொல்லுகிறது, தெரியுமா?"

"சொல்லுங்கள்."

"கவனமாய்க் கேள் — 'எந்தெந்தப் பொருள்களிலிருந்து நாம் ஆசையை நீக்கிக் கொள்கிறோமோ, அந்தந்தப் பொருள்களினால் உண்டாகும் துன்பங்களிலிருந்து விடுபட்டவர்களாவோம்' என்கிறது அது. இதற்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன் கேள். காலையில் எழுந்ததும் உனக்குக் காப்பி வேண்டியதாய்இருக்கிறது. ஒரு நாள் அது கிடைக்கச் சற்று நேரமாகிவிட்டது என்று வைத்துக் கொள்; — அல்லது, கிடைக்கவில்லை என்று வைத்துக்கொள்; உனக்கு எவ்வளவுஆத்திரமும், கோபமும், வேதனையும் உண்டாகிறது! காப்பி சாப்பிடுவதை ஒரேயடியாக நிறுத்திவிட்டால் உனக்கு இந்தக் கஷ்டம் ஏற்படாது அல்லவா? — இதைத்தான் திருவள்ளுவர் சொன்னார். கஷ்டம் இல்லை என்றால் சுகந்தானே? சுகம் நிறைந்ததானால், வாழ்க்கை, தரமானது என்றுதானே பொருள்."

"ஆமாம்; ஆமாம்".

"நாம் மறந்துவிட்ட இந்த அருமையான உண்மையை நமக்கு எடுத்துச் சொல்ல இந்தக் காலத்தில் ஒரு மகான் வந்தார்—"

"காந்தித் தாத்தா தானே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் பேரன்.

"ஆமாம்—"

"எனக்குத் தெரியும்; நீங்கள் எப்படியாவதுஅவரைக்கொண்டுவந்துநுழைத்துவிடுவீர்கள்".

தாத்தாவும் தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தார். "என்ன செய்வது?எல்லா விஷயங்களுக்கும் அவரைத்தானே கொண்டுவர வேண்டியதாயிருக்கிறது? அவருடைய சிறப்பு அவ்வளவு பரந்து விரிந்து இருக்கிறது — அது இருக்கட்டும். நீ அவரைப் படங்களில் பார்த்திருக்கிறாயல்லவா? இடுப்பில் வேட்டி இருக்கும். சில சமயம் கையில் ஒரு கோல் பிடித்திருப்பார். அவர் காப்பி குடிக்கமாட்டார். ஒரு சினிமா கூடப்பார்த்ததில்லை. நாற்காலியில் உட்காரமாட்டார். இந்தக் காலத்துப்பழக்க வழக்கங்கள் பல அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. அப்படியிருந்தும் உலகத்திலேயே அவர்தான் மிக்க சந்தோஷமானவராயிருந்தார். அவருடைய வாழ்க்கைத் தரம்தான் முதல் தரமானதாயிருந்தது. உலகம் முழுவதும் இப்போது அவரை ஒரு பெரிய மகானைக் கொண்டாடுகிறது அல்லவா?"

"உண்மைதான் தாத்தா?"

"எளிய வாழ்க்கை வாழ வேண்டும்; உயர்ந்த விஷயங்களைச் சிந்திக்க வேண்டும்; ஊருக்கு நல்லது செய்யவேண்டும். இதுதான் நல்லவாழ்க்கை —இப்போது தெரிந்து கொண்டாயா, வாழ்க்கைத் தரம் என்றால் என்னவென்பதை?"

"விளங்கிவிட்டது, தாத்தா!"

"இனிமேல் காப்பி கேட்க மாட்டாயே!"

பேரன் சிரித்தான்.

['கிராம ராஜ்ய'த்திலிருந்து]

# கலியாணவீட்டில் விருந்து சாப்பிட வந்தவர்

## காலையில் பிணமாகக் கிடந்தார்

யாழ்ப்பாணம், புதன்

கலியாணவீட்டில் விருந்து சாப்பிடச் சென்றவர் விருந்து சாப்பிடாமலே, காலையில் பிணமாகக் கிடந்த பரிதாபகரமான சம்பவம் சென்ற சனிக்கிழமை கரையூரில் நிகழ்ந்தது.

சென்ற சனிக்கிழமை கரையூரில் ஒரு கலியாணம் நடந்தது. மனுவல் ரோமான் என்பவர்தான் மாப்பிள்ளை.

கலியாணம் முடிந்தபின் இரவு விருந்து சாப்பிட வருமாறு தனது நண்பன் ஆறுமுகம் பொன்னுத்துரை என்பவரை மாப்பிள்ளை அழைத்திருந்தார்.

மராமத்து இலாகாவில் ஒரு தொழிலாளியான ஆறுமுகம் பொன்னுத்துரை, மாப்பிள்ளையின் அழைப்பையேற்றுவிருந்து சாப்பிடச் சென்றார்.

மிதமிஞ்சி மது அருந்தியநிலையில் சென்ற ஆறுமுகம் பொன்னுத்துரை தமக்கு சாப்பாடு வேண்டாமென்று கூறி, ஒரு பாயும் தலையணையும் தருமாறு கேட்டார்.

பாயும் தலையணையும் கொடுத்ததும் கலியாணம் நடந்தமணப்பெண் வீட்டு விருந்தையில் பொன்னுத்துரை படுத்துக் கொண்டார்.

மறுநாள் 4-ந் திகதி காலை நண்பனுக்குத்தேநீர் கொண்டு வந்த மாப்பிள்ளை நண்பனைத் தட்டியெழுப்பியபோது அவர் இறந்து கிடந்ததைக்கண்டார்.

இவ்விஷயம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது.

கரையூர் பொலிசைச்சேர்ந்த திரு. ஈ. ஈஸ்வரபாதம் விசாரணை நடத்தினார்.

ஆறுமுகம் பொன்னுத்துரையின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். வி. கதிரவேலு மரணவிசாரணை நடத்தினார்.

பதில் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் கனகரத்தினம் பிரேதபரிசோதனை நடத்தினார்.

காலஞ்சென்ற பொன்னுத்துரையின் உள் உறுப்புக்கள் சில அரசாங்க பரிசோதகருக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.

—

## நாவலர் பெருமானுக்கு சிலை அமைக்கவும்

யாழ்ப்பாணம், புதன்

தமிழுக்கும் சைவத்துக்கும் அரிய பலதொண்டுகளைச்செய்த நாவலர் பெருமானின் ஞாபகச் சின்னமாக அவரது உருவச் சிலையை யாழ்ப்பாண நூல்நிலையத்தில் அல்லது முற்றவெளி மைதானத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு, யாழ்ப்பாண நகரமேயருக்கும் நகர சபை அங்கத்தவர்களுக்கும் தமது வேண்டுகோளில் திரு. சி. சீவரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

—

## சாஸ்திரியின் பரிகாரம் ஏற்கப்பட்டது

புதுடில்லி, ஜூன் 6

அஸ்ஸாமில் மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உள்நாட்டுமந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி கூறிய யோசனையை அஸ்ஸாம் காங்கிரஸ் கமிட்டியும் அரசாங்கமும் ஏற்றுக்கொடண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

—

## இந்தியாவுக்கு மேலும் 2 விமானங்கள்

புதுடில்லி, ஜூன் 6

இந்தியாவின் உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கு மேலும் 2 வைக்கவுண்ட் விமானங்கள் சேவைக்கு விடப்படும் என மந்திரி டாக்டர் சுப்பராயன் சென்னையில் கூறினார்.

### தேவை

பலசரக்குச்சாய்ப்புச்சாமான்கள் விற்பனை செய்வதிலும் வான்மூலம் சாமான்கள் வினியோகம் செய்வதிலும் அனுபவமுள்ள ஒருவர் தேவை. விபரங்களுக்கு:-

விநோதன்ஸ் அன் கோ.
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## நல்லூர் கந்தசுவாமி கோவில்

# சகஸ்ர சங்காபிஷேக தண்டிகை உற்சவ கற்பூர விழா

### இம்மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை

காலை 6-00 மணி: சங்காபிஷேக ஆரம்பம்
காலை 10-00 மணி: காலசந்திப் பூஜை
காலை 10-30 மணி: கதாகாலட்ஷேபம்

"மங்கையர்க்கரசி"

என்னும் பொருள் பற்றி ஸ்ரீ C. S. S. மணிபாகவதர் அவர்கள் கதாப்பிரசங்கம்.

மாலை 6-00 மணி: இரண்டாம் காலப்பூஜை
மாலை 6-30 மணி: ஊஞ்சல்
மாலை 7-00 மணி: தண்டிகைத் திருவிழா

குறிப்பு: இந்த நிகழ்ச்சிகள் அவசியமேற்படின் முன்னறிவித்தல் எதுவுமின்றி மாற்றம் செய்யப்படும்.

நல்லூர் தேவஸ்தானம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட், தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.